ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

கீழை-சடகோபதாசர் அருளிச்செய்த

# அரிசமயதீபம்

என்னும்

# குருபரம்பரை.

ஆழ்வார்கள் ஆசார்யர்கள் வைபவமான இந்நூல்

சமதமாத்யாத்மகுண ஸம்பந்நர்களான

**ஸ்ரீமாந் கூ-முதலியாண்டாஞ் ஸ்வாமிகள்,**

இயற்றமிழ்ப் ப்ரபந்தவித்வான்

**ஸ்ரீமாந் கொ-பள்ளிகொண்டான பிள்ளையவர்கள்**

என்னும் ஆசிரியர்கள் நியமநத்தின்படி சேர்த்த

**பொழிப்புரையுடன்**

இயற்றமிழாசிரியரான மஹாவித்வான்

**ஸ்ரீமாந் கா-இராமசாமி நாயுடவர்களால்**

பரிசோதிக்கப்பட்டு,

ஸ்ரீமாந் திருமணம்

**செல்வகேசவராய முதலியார், M. A. அவர்கள்**

ஆதரவும் பேருதவியுங்கொண்டு

அச்சிடப்பட்டுவருகின்றது.

முதலாவது { பரமபதச்சருக்கம், ஆதியோநிச்சருக்கம் } விலை அணா 4.

மற்றைச்சருக்கங்களையுந்தொடர்ச்சியாகவே விரைவில் அச்சிட்டுப் ப்ரகாசஞ்செய்துவருவோம்.

சே. முத்துகிருஷ்ண நாயுடு,
19, சாமிபிள்ளை தெரு, சூளை, சென்னை.

MADRAS:
CHENGALROYA NAICKER'S ORPHANAGE PRESS,
*7, Stringers Street.*
1902

All rights Reserved.

118416

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# அரிசமய தீபம்.

## நூன்முகம்.

க. புகழ்விளங்குகதருமமுஞானமும்பொலிக
சகமுமாதவன்றனிமுதற்சமயமுந்தழைக்க
நிகமநான்குமந்தணருமாநிரைகளுநிறைந்த
மகமுமோங்குகவாழியமுறைதவாமன்னன்.

(இதன்பொருள்.) புகழ் விளங்குவதாக; தருமமும் ஞானமும் பொலிவடைவனவாக; உலகமும் திருமகணாயகனது ஒப்பற்ற முதன்மையான சமயமுந் தழைப்பனவாக; நான்கு வேதங்களும் அந்தணரும் பசுக்கூட்டமும் நிறைவுற்றயாகமும் விருத்தியடைவனவாக; முறை தவறாத மன்னன் வாழ்வானாக (என்றவாறு).

"தோன்றிற்புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற்றோன்றாமை நன்று" என்கிறபடி உலகத்து மாந்தர் பெறவேண்டியது புகழாதலாலும், அப்புகழ் - தருமங்களையியற்றுவதனா லுண்டாவதாதலாலும், அத்தருமம் - தக்கஞானத்தாலே பெறுவதாதலாலும், அந்தஞானம் - மக்களுக்கு வேண்டிய பலவளங்களுடன் உலகம் செழித்திருப்பதனால் நிலைபெறுவதொன்றாதலாலும், அச்செழிப்பு-பகவதாராதனங்களாலமைவதாதலாலும், அத்திருமாமகள் கொழுநனது ஆராதனம் நிலைபெற்றோங்குதற்கு அவனது சமயம் வேண்டற்பாலதாதலாலும், அச்சமயத்துக்குப் பிரமாணங்களான வேதங்கள் இன்றியமையாதனவாதலாலும், அவ்வேதங்கள் - அத்யயன அத்யாபனங்களால் வழங்கவேண்டியதற்கு அந்தணர் அமைந்தவராதலாலும், அவர்க்கு ஆநிரையும் மகமும் அவசியமாதலாலும், இவற்றுக்குத் தீங்கு வாராவண்ணங் காப்பதற்கு மன்னன் இன்றியமையாதவனாதலாலும் இவற்றை இம்முறையே எடுத்தோதி வாழ்த்துக்கூறினார். (க)

உ. பூதன்பொய்கைபேய்மழிசையான்றொண்டர்தாட்பொடிநால்
வேதமாறன்முத்தமிழ்க்குலசேகரன்விளங்கும்
கோதைநாமத்தன்பட்டர்கோன்கிளர்பரகாலன்
நாதன்யாமுனன்வாழ்கவாழியதமிழ்நலனே.

(இ-ள்.) பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், நான்கு வேதங்களையுந் தமிழாகச்செய்த நம்மாழ்வார், முத்தமிழ் வல்லவராகிய குலசேகராழ்வார்,

விளங்கும் திருப்பாணாழ்வார், பெரியாழ்வார், பெருமையானுயர்ந்த திருமங்கையாழ்வார், ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்ரீஆளவந்தார் இவர்கள் வாழ்வார்களாக; தமிழின் நலமும் வாழ்வதாக. (எ-று.)

ஸ்ரீஆண்டாள் பெரியாழ்வாரது திருமகளாய் அவர்வைபவத்தில் அடங்கினவராதலாலும், மதுரகவியாழ்வார் நம்மாழ்வார்க்குச்சிஷ்யராய் அவரது பிரபாவத்திற் சேர்ந்தவராதலாலும் இவ்விருவரையும் இவ்வாசிரியர் பிரித்துக்கூறிற்றிலர். (உ)

௩. பதிகளெங்கணுஞ்சுருதியின்பொருளெலாம்பரப்பி
அதிகமான்முதற்சமயமுந்தன்மதமாக்கி
எதிகணாதனாகியவிராமாநுசனிருதாட்
டுதிகருங்கடற்றுயிலுமாதவன்பதத்துதியே.

(இ-ள்.) எல்லைப்பதிகளிலும் வேதத்திற் பிரதிபாதிக்கும் பொருள்களையெல்லாம் விரித்து, பெருமைவாய்ந்த திருமாலினது முதன்மையான சமயத்தையுந் தனது மதமாகச்செய்து, எதிகளுக்குத் தலைவராகிய இராமாநுஜ முனிவரது இரண்டு திருவடிகளைத் துதித்தலானது சிறப்புற்ற திருப்பாற்கடலில் யோகத்திருத்துயில் கூரும் மாதவனது திருவடிகளைத் துதித்தலேயாம். (எ-று).

'மான்முதற்சமயமுந்தன்மதமாக்கி' என்றது "எம்பெருமானார் தரிசனமென்றேயிதுக்கு, நம்பெருமாள்பேரிட்டு நாட்டிவைத்தார் - அம்புவியோர், இந்தத்தரிசனத்தை யெம்பெருமானார்வளர்த்த, அந்தச்செயலறிகைக்கா" என்று உபதேசரத்தினமாலையிலும் "திருக்கோட்டியூர்நம்பி வெளியிட்டபடி எங்ஙனே யென்னில் :—தாம் திருமந்த்ரார்த்தம் ப்ரஸாதிக்கும்போது ஆருக்கும் சொல்லாதே சொன்னேனென்று ஆஜ்ஞாபித்தருளிச்செய்ய, இவரும் அத்தை அனிதாநமாகத் தெற்காழ்வான் திருவோலக்கத்திலே ஸர்வர்க்குமருளிச்செய்ய, நம்பியும் இத்தைக்கேட்டுக் குபிதராய் உடையவரையழைத்து ஆசார்யாஜ்ஞாதிலங்கநத்தில் பலமேதென்ன, உடையவரும் நரகமேபலமென்ன, நம்பியும் அறிந்திருந்து செய்வானேனென்ன, இவரும் அடியேனொருவனுமன்றோ நரகம்புகுவது; தேவரீர் திருவடி ஸம்பந்தத்தாலே இவ்வாத்மாக்களெல்லாம் உஜ்ஜீவிக்குமென்று சொன்னேனென்று விண்ணப்பஞ் செய்ய, நம்பியும் ப்ரீதராய் எம்பெருமானாரே வாருமென்றெடுத்தணைத்துக்கொண்டு இப்பரஸம்ருத்தி நமக்கில்லையாய்விட்டதேயென்று, இதை எம்பெருமானார் தர்சநமென்று சொல்லுங்கோளென்று சொல்லி, அவரோ நீரென்றருளிச்செய்து, தம்குமாரர் தெற்காழ்வாரையும் உடையவர் திருவடிகளிலே யாச்ரயிப்பிக்கையாலும்" என்று குருபரம்பராப்ரபாவத்திலுமுள்ள ஸ்ரீஸூக்திகளின்படி பகவதாசார்ய நியமநங்களை நோக்கியென்க. 'முந்தைமாறரிசனந் தனதுபேர்முதன்மையிற் றந்தாமாநுச[illegible]' பின்னுங்கூறுவர். (௩)

௪. கங்கைதங்கியபங்கயச்சரணமுங்கமல
மங்கைசெங்கதிர்மணிதிருவற்சமார்மார்புஞ்
சங்கையாழியைக்கதைசிலைவாளினைத்தரித்த
செங்கையும்பயில்பரமனைப்பணிகுவாந்தினமும்.

(இ-ள்.) கங்காநதி பொருந்திய தாமரைபோன்ற திருவடிகளும், கமலமலரி லெழுந்தருளிய பெரியபிராட்டியும் சிவந்த கிரணங்களையுடைய



கௌஸ்துபமணியும் ஸ்ரீவற்சமும் பொருந்திய திருமார்பும், பாஞ்சஜந்யத்தையும் சுதரிசனத்தையும் கதாயுதத்தையும் சார்ங்கத்தையும் நாந்தகத்தையும் தரித்திருக்கும் சிவந்த திருக்கைகளுமுடைய பரம்பொருளை எந்நாளும் பணிவாம். (எ-று.) சரணமும் மார்பும் கையும் பயில் பரமன் எனமுடிக்க.

தாயின் அவயவங்களெல்லாங் கிடக்கத் தனக்குத் தாரகமான பால் சுரக்குந் தனமே குழவிக்கு உத்தேசமாவதுபோல சரணாகதனான சேதநனுக்கு எம்பெருமான் திருவடியே தஞ்சமென்பதும், அதற்குப் புருஷகாரபூதையும் கைங்கர்யவர்த்தகையுமான பெரியபிராட்டியார் இன்றியமையாதவளென்பதும், நிரதிசயபோக்யமான திவ்யாபரணங்களும் ரக்ஷணபரிகரங்களான திவ்யாயுதங்களுமுடைய இறைவனே நித்யாநுபவ விஷயமென்பதுந் தோன்ற இங்ஙனம் விதந்தெடுத்தோதினார். (௪)

---

[அடியில் வருகின்ற மூன்று செய்யுட்களும், வெவ்வேறு ஆசிரியர்களா லியற்றப்பட்ட செய்யுட் குருபரம்பரைகளில் எமக்குக்கிடைத்த நான்கனுள், இவ்வரிசமயதீபம் முதலாவதாக, மற்றைய மூன்றினின்று மெடுக்கப்பட்டவை. நான்காவது குருபரம்பரையின்பாற்பட்ட மூன்றாவது செய்யுள், அக்குருபரம்பரையில் முதலில் பல ஏடுகள் கிடைக்காமையால், இடையில் தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவத்தினின்றெடுக்கப்பட்டது. இவ்வரிசமய தீபத்தின் ஆசிரியர் சொல்லாமல் விட்ட வைபவங்களை, அக்குருபரம்பரைகள் மூன்றினின்றும் எடுத்து அங்கங்கே வசனரூபமாகச் சேர்க்கவும், அவசியமான இடங்களில் செய்யுட்களையும் எடுத்துக்காட்டவும், உத்தேசித்திருக்கின்றோமாகையால், அவற்றினின்றும் ஒவ்வொரு துதிகவி இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது.]

திருமகள்கொழுநனுதிசெண்பகமாறனுதி
அருமறைதமிழாப்பாடிமாரமுதிடையாவென்னைக்
கருநெறிபுகாதாட்கொண்டகாரணன்காறுமுன்னா
குருபரம்பரையிற்றோன்றுங் குரவரைவணக்கஞ்செய்வாம்.

திருவாழிதிருச்சங்கந்திருத்தண்டந்திருச்சார்ங்கந்திருவாளென்னுஞ்
செருவாருமரக்கர்கடஞ்சிரமுருட்டுமைம்படையுந்தேவர்போற்றும்
மருமாலையாக்கிரிவர்விச்சுவசேனருஞ்செம்பொன்வளையாமென்னப்
பொருமேனிக்கருடனுமஞ்சனைமகனுங்காப்பாகப்பொருந்தமாதோ.

கஞ்சமொத்தருள்பொங்குசெங்கண்களுங்கைரவத்திருவாயின்முறுவலும்
அஞ்சலென்னவமைத்தருள்செங்கையுமன்னைசெந்திருவாழுமருமமும்
நெஞ்சிலுன்னுமவர்க்கருணைவீரசங்களிரண்டெனுந்தாள்களுந்
தஞ்சமல்லதுபோலெனத்தள்ளினுந் தமியனேற்குச்சரண்பிறிதில்லையே.

நான்முகம் முற்றிற்று.

## க-வது பரமபதச்சருக்கம்.

[பரமபத வர்ணனை.]

க. உலகம்பற்பலசெறியுமண்டங்களினுயர்பாய்
மலரின்மேலயன்முதலினோர்க்கறியொணுவடி[illegible]
இலகுமாரமிர்துதிகுழ்ந்திருநதிவிரசை
குலவுமாதிருநாட்டின்வளமியாருணிப்பார்.

(இ-ள்.) உலகங்கள் பற்பல பொருந்திய அண்டங்களனந்தங்களுக்கும் மேற்பட்டதாய், பெருமாளுடைய உந்திக்கமலத்தில் வசிக்கும் பிரமன்முதலானவர்களுக்கும் அறிதற்கரிய சொரூபத்தையுடையதாய், பிரகாசிக்கும் அரிய அமிர்தமயமான பிரவாகமுடையதாய்ப் பெருமையையுடைய விரஜாநதியானது பொருந்தியிருக்கும் திருமாலெழுந்தருளிய திருநாடாகிய பரமபதத்தின் வளப்பத்தை யார் மதிக்கவல்லவர்கள்? (எ-று.) (க)

உ. நதியின்பாங்கரினவமணிநளினமாரயிரம்
மதியமென்றொருவாவியவ்வாவியின்மருங்கே
நிதியின்சாகைகணிறைபணைக்கணவமுநிறைந்த
புதியநீர்மையோர்கூவிளவிருக்கமும்பொருந்தும்.

(இ-ள்.) அந்த விரஜாநதியின் அருகில் நவமணிகளும் தாமரைகளுமுடைய அயிரம்மதியமென்றொரு தடாகமுண்டு; அத்தடாகத்தின் சமீபத்தில் பொன்மயமாகிய இலைகள் நிறைந்த கிளைகளையுடைய அசுவத்தவிருக்ஷமும், புதுத்தன்மை நிறைந்த ஒப்பற்ற வில்வவிருக்ஷமும் பொருந்தியிருக்கும். (எ-று.) (உ)

அயிரம்மதியம் - ஆரம்ஹ்ரதம் என்னும் வடசொல். அசுவத்த விருக்ஷம் - அரசமரம்.

ங. துகளில்போதியின்பெயரினைச்சோமசவனமாப்
பகர்வராங்கதன்பாங்கரின்பவளவாய்ப்பணைத்தோட்
புகரில்வாள்விழிப்புயல்புரைபுரிகுழற்புலவோர்
மகளிர்கோதிலைந்நூற்றுவர்மகிழ்வுடன்வாழ்வார்.

(இ-ள்.) குற்றமற்ற அவ்வசுவத்த விருக்ஷத்தின் பெயரைச் சோமசவனமென்று வழங்குவார்கள். அங்கு அதனருகில் பவளத்தை நிகர்க்கும் வாயையும், பருத்த தோள்களையும், குற்றமில்லாத வாளையொத்த கண்களையும், மேகம் போன்ற சுருண்ட கூந்தலையுமுடைய தேவஸ்திரீகளாகிய அப்சரசுக்கள் ஐந்நூற்றுவர் மகிழ்ச்சியோடு வாழ்ந்துகொண்டிருப்பார்கள். (எ-று.) (ங)

புலவோர்மகளிர் - தேவதாஸ்திரீகள், அப்சரசுக்கள்.

ச. தருந்துழாய்முடிமுகில்பதங்கருதுமெய்த்தவர்சேர்
வருந்துவத்தலமாதலானவ்வம்மகளிர்
பொருந்துளார்க்கணிகலைதொடைமுதலியபுனைந்தே
மிருந்தவன்பொடும்பணிந்துபன்முறைபராய்விடுப்பார்.



(இ-ள்.) தனது மேன்மைக்குத்தகுந்த திருத்துழாய்மாலையணிந்த திருமுடியினையுடைய மேகம் போன்ற பெருமானது திருவடிகளைச் சிந்திக்கும் மெய்ம்மையயுள்ள தவமுடையோர் அர்ச்சிராதிமார்க்கமாகச் சேரும் வழி அவ்விடமாதலால், முன்சொன்ன அவ்வப்சரசுக்கள் அங்குப் போகுமவர்களுக்குத் திருவாபரணம் திருப்பரியட்டம் திருமாலை முதலியவைகளைத் தரித்து மிகுந்த அன்போடு பணிந்து பலமுறையும் துதித்து வழிவிடுவார்கள். (எ-று.) வருந்து - வழி. (ச)

[ஸ்ரீவைகுண்டநகரச் சிறப்பு.]

ரு. ஆயதோர்திருநாட்டினுக்கணியதாயரவம்
பாயன்மாதிருமாதுளமகிழ்வுறப்படைத்த
தூயமாநகர்மணியினாலெழுமதில்சூழ்ந்தே
மேயநாலெழுகோபுரமேடைகள்விளங்கும்.

(இ-ள்.) அத்தகைமையதான திருநாட்டுக்கு அலங்காரமாய் ஆதிசேஷசயனத்தையுடைய திருமாலானவர் பெரியபிராட்டியாரது திருவுள்ளம் மகிழும்படி படைத்த பரிசுத்தமாகிய ஸ்ரீவைகுண்டநகரானது, இரத்தினங்களாற்சமைந்த மதிலாற் சூழப்பெற்று, பொருந்திய நாற்புறமும் கோபுரங்களும் எழுநிலை மேடைகளுமுடையதாய் விளங்கிக்கொண்டிருக்கும். (எ-று.)

சா. முன்னர்சுப்பிரமுனிமனைவிகுண்டைபான்முளரி
அன்னகட்புயலவதரித்தங்கதன்றமைந்த
தன்னரும்பெயராகத்தன்கலையினாற்சமைத்த
பொன்னகர்க்கிணையாவரெத்தலத்தினைப்புனைவார்.

(இ-ள்.) முன்பு, சுப்பிரமுனிவரது மனைவியாகிய விகுண்டையென்பவளிடத்தில் செந்தாமரைக்குச் சமானமாகிய திருக்கண்களையுடைய மேகம் போன்ற பரந்தாமன், திருவவதாரஞ் செய்த அக்காலத்தில் அமைந்த தனது வைகுண்டன் என்னும் அரிய பெயரே பெயராகத் தனது திவ்ய சக்தியினாற்படைத்த பொன்மயமான (அந்த ஸ்ரீவைகுண்ட) நகரத்துக்கு ஒப்பாக எவ்விடத்தினை யாவர் விரித்துரைப்பார்கள். (எ-று.) (சா)

[நித்யமுக்தர்கள்.]

எ. தினகரன்பொருவாயிரம்பணமணிச்சேடன்
வினதைகான்முளைசேனைநாயகன்சயன்விசயன்
கனகவாண்முடிச்சுனந்தனந்தன்சங்கக்கன்னன்
அனகன்புட்கரன்புட்கராக்கன்குமுதாக்கன்

(இ-ள்.) சூரியனுக்குச் சமானமான மாணிக்கங்களைத் தனது படங்களிலுடைய ஆதிசேஷர், வினதைபுத்திரராகிய பெரியதிருவடி, சேனைமுதலியார், ஜயர், விஜயர், பொன்மயமாய் ஒளிபொருந்திய முடியையுடைய சுநந்தர், நந்தர், சங்ககர்ணர், அனகராகிய புஷ்கரர், புஷ்கராக்ஷர், குமுதாக்ஷர், (எ-று.) வினதைகான்முளை - வைனதேயன், கருடன், பெரியதிருவடி.

அ. கருநிறக்களிற்றுனனன்பிருச்சினிகருப்பன்
பொருவகற்றுகாளன்புண்டரீகனும்புனிதன்

பெருமிதக்குமுதன்புகழ்வாமனும்பெரியோன்
தெருளுடைச்செயச்சேனன்மெய்ச்சுப்பிரதிட்டன்

(இ-ள்.) கரிய நிறமுடைய சுஜானனர், பிருச்சினி கர்ப்பர், ஒப்பில்லாத காளர், புண்டரீகரென்னும் புனிதர், பெருமையுடைய குமுதர், கீர்த்தியையுடைய வாமரென்னும் பெரியோர், தெளிவுடைய ஜயச்சேனர், மெய்ம்மையுடைய சுப்பிரதிஷ்டர், (எ-று.) (௮)

௯. பொறுமைவாய்மைசேர்சுமுகனோடமானவபுருடன்
சறுவகெந்திமோமுதலினர்கருதருந்தகையோர்
மறுவகன்றுயர்பரமபாகவதரேமணியார்ந்
துறுவளந்திகழ்மனையினங்கர்வயினுறைவோர்.

(இ-ள்.) பொறுமையும் வலிமையுமுடைய சுமுகர், அமானவபுருஷர், சருவகந்தி முதலோராய் எண்ணற்கரிய பெருமையையுடையோரான நித்யர்களும் குற்றமற்று உயர்ந்த பரமபாகவதர்களான முக்தர்களும் அந்நகரத்திலுள்ள இரத்தினங்களாலமைந்து வளப்பமுடைய திருமாளிகைகளில் நித்தியவாசஞ் செய்வோர்களாவர். (எ-று.) (௯)

௧0. சோதியாயிரங்கோடிபானுவின்மிகத்துலங்கி
நீதியார்ந்தமுற்குணமுறைநிலயமதாகிப்
பேதியாதுமுக்காலமுமிகந்துயர்பெருமைக்
காதியாயளந்தறிபொணுவைகுண்டமதனில்

(இ-ள்.) பிரகாசத்தையுடைய ஆயிரங்கோடி சூரியரைக் காட்டிலும் மிகவிளங்கி, நீதியுடைய முதற்குணமாகிய சுத்தசத்துவம் நிலைபெற்ற இருப்பிடமாய், பேதிக்கப்படாமல் மூன்றுவித காலசாம்பிராச்சியமுங்கடந்து உயர்ந்த பெருமைக்கு முதன்மையானதாய் அளந்தறிவதற்கரிதான ஸ்ரீவைகுண்டநகரத்தில், (எ-று.) (௧0)

[திருமாமணிமண்டபத்தில் இறைவன் எழுந்தருளியிருத்தல்.]

௧௧. மாணிக்கச்செழுந்தூணமாயிரநிரைவகுத்த
ஆணிப்பொன்மணிமண்டபத்தாதனத்தமைதாள்
எணிற்றுங்கிருநான்குடைத்தவிசின்மேலிலககுங்
காணிற்பொன்னிதழாயிரமலர்ந்ததோர்கமலம்.

(இ-ள்.) மாணிக்கத்தாலமைந்து அழகுடைய ஆயிரந்தூண்களை வரிசையாகவைத்த ஆணிப்பொன்னினாலும் மணிகளாலும் சமைந்த மண்டபத்தில், மணிகளாலமைந்த நிலையாகத்தாங்கும் எட்டுக்கால்களையுடைய ஆசனத்தின்மேல், இலக்கத்தைக் காணுமிடத்துப் பொன்மயமாகிய ஆயிரம் இதழ்கள் மலர்ந்திருப்பது ஒரு கமலமாகும். (எ-று.) (௧௧)

௧௨. இதழ்கண்மீதனுக்கிரகையேமுதலிலங்கிழையார்
கதழ்பெருந்தகைக்குமுதனதியர்குடைகவரி
முதலமங்கலங்கொடுநிறைந்திடமலர்முளரி
அதன்மணிப்பொகுட்டனந்தன்மீதவனியுண்டளந்தோன்



(இ-ள்.) அக்கமலத்தின் இதழ்களின்மீது அனுக்கிரகை முதலியோராய் விளங்கும் ஆபரணங்களையுடைய மடந்தையரும் மிக்க பெருந்தகையையுடைய குமுதனாதியரும் திருக்குடை திருவெண்சாமரை முதலிய மங்கல வரிசைச் சின்னங்களைத் தாங்கி நிறைந்திருக்க, அக்கமலமலரின் அழகிய பொகுட்டிலமர்ந்த திருவனந்தாழ்வான்மீது பூமியை யுண்டளந்த பெருமான், (எ-று.) (௧௨)

௧௩. கமலநான்முகக்கடவுளுங்கறைமிடற்றவனும்
அமரர்கோன்முதலனைவருஞ்சனகனாதியரும்
தமரவாருதிநதிமலைமுதற்சராசரமும்
விமலகேசவவெனப்புகழ்ந்திருபதம்விரும்ப

(இ-ள்.) கமலத்தில் வீற்றிருக்கும் நான்கு முகங்களையுடைய பிரமதேவனும் கரியமிடற்றையுடைய சங்கரனும் இந்திரன் முதலிய தேவரெல்லோரும் சனகனாதி முனிவர்களும் ஒலியையுடைய கடல் நதி மலை முதலிய சராசரங்களும் மலரகிதனே! கேசவனே! எனவாழ்த்தி அவ்வெம்பெருமானது இரண்டு திருவடிகளை விரும்பவும், (எ-று.) (௧௩)

௧௪. அரக்கராற்றலுண்டமரர்தமாவிதந்தகிலம்
புரக்குமாறுவிச்சாதரர்கின்னரர்புகழக்
கரக்கவெவ்வினைதருமமோங்குறவடிக்கணைகள்
துரக்கும்வின்முதற்படையணங்குருவுடன்சூழ

(இ-ள்.) அரக்கர்களது வலியையுண்டு, தேவர்களது உயிரைத்தந்து உலகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு, வித்யாதரரும் கின்னரரும் புகழவும்; வெவ்விய தீவினை ஒளிக்கவும்; தருமம் ஓங்கவும்; கூர்மையான பாணங்களை விடுக்கும் சார்ங்கம் முதலிய ஆயுதங்கள் தேவதாவுருவங்களுடன் சூழ்ந்திருக்கவும், (எ-று.) (௧௪)

௧௫. பொன்னும்பூமியுநீளையும்விசயமும்புகழும்
என்னுமங்கையரிருமருங்கணுகுறவெழிலே
துன்னும்பன்மணிமகுடகுண்டலந்திசைதுலங்க
மன்னும்பேரொளிப்பீதகவுடையிடைவயங்க

(இ-ள்.) பெரியபிராட்டியாரும் பூமிப்பிராட்டியாரும் நீளாதேவியும் விஜயமும் புகழும் என்றுசொல்லும் மங்கையர்களும் இரண்டு பக்கங்களிலுமிருக்கவும்; அழகையுடைய பலவித மணிகளமைந்த திருவபிஷேகமும் மகர குண்டலங்களும் நாற்றிசையிலும் பிரகாசிக்கவும்; நிலைபெற்ற பேரொளியையுடைய திருப்பீதாம்பரம் திருவரையில் விளங்கவும், (எ-று.) (௧௫)

௧௬. கருந்துழாய்மணிசெய்யதாமரைவடங்கவினைப்
பொருந்துறும்வனமாலிகைகவுத்துவம்புரிநூல்
பெருந்தகைத்திருவற்சமுத்தணிவடம்பெரிதுந்
திருந்துமார்பகத்தழகினுக்கழகுறச்செறிய

(இ-ள்.) பெருமையையுடைய திருத்துழாய்மாலையும் செம்மையான நளினாக்ஷமாலையும் அழகையுடைய வனமாலையும் கௌஸ்துபமும் புரிநூலும் பெருந்தகையினையுடைய ஸ்ரீவற்சமும் அழகிய முத்துவடமும் மிகவுந் திருந்திய திருமார்பின் அழகுக்கு அழகுண்டாகும்படி பொருந்தவும், (எ-று.) (௧௬)

கஎ. முடிவிறத்துவஞ்சதுமறைத்தருமமேமுதல
வடிவெடுத்திருமலர்ப்பதம்வணங்கியேவழுத்த
அடிமைபுக்கிருபுயத்தினுந்திகிரிசங்கமைந்த
படிமைமெய்த்தவப்பரமபாகவதர்கள்பரவ

(இ-ள்.) முடிவில்லாத தத்துவங்களும் நான்கு வேதங்களும் தருமம் முதலியவைகளும் உருவம் பெற்று இறைவனது இரண்டு மலர்ப்பதங்களை வணங்கி வாழ்த்தவும்; பெருமானுக்குச் சேஷபூதராய் இரண்டு புயங்களினும் திருவாழி திருச்சங்குகளைத்தரித்த திருமேனியையுடையவராய் மெய்ம்மையான தவத்தையுடைய பரமபாகவதர்களான முக்தர்கள் வணங்கவும், (எ-று.) (கஎ)

கஅ. புவனமென்றுளவெவையவற்றுள்ளுமாய்ப்புறம்பாய்
உவகையின்பமர்ந்தறிதுயில்புரிகுவனொருகால்
அவணருந்துயிலுணர்ந்தரியாதனத்தடியார்
எவருமபாங்குறத்திருவுடனினிதுவீற்றிருந்தான்.

(இ-ள்.) புவனமென்று சொல்லப்பட்டுள்ளன எவையோ அவற்றில் உள்ளும் புறமுமாயிருந்து ஆநந்தருணத்தாலே அகமகிழ்ச்சியுடையானுகி அறிதுயில் செய்வோனுன எம்பெருமான், ஒருகாலத்தில் அங்கு தனது அறிதுயில் நீங்கி முன்சொன்ன சிம்மாசனத்தில் அடியார்களெல்லோரும் புடைசூழப் பெரியபிராட்டியாரோடு ஒன்று எழுந்தருளியிருந்தனன். (எ-று.) (கஅ)

[பெரியபிராட்டியார் எம்பெருமானைப் பிரசினஞ்செய்தல்.]

க௯. இருந்ததாமரைக்கண்ணனையிந்திரைவணங்கித்
தருந்தவாதமுத்தொழிற்குனியளித்தருடைமை
பொருந்திநான்முகனைம்முகனிருவரைப்புனைத்
தருஞ்சராசரம்படைக்கவுமழிக்கவுமளித்தாய்.

(இ-ள்.) அங்ஙனமிருந்த செந்தாமரையைப் போன்ற திருக்கண்களையுடைய பெருமானைப் பெரியபிராட்டியார் வணங்கி, தேவரீர் நியமிக்கும் நிலைமையான முத்தொழிலில் ரக்ஷித்தருளும் செய்கையைத் தேவரீர் பொருந்தி, நான்குமுகங்களையுடைய பிரமன் ஐந்துமுகங்களையுடைய உருத்திரன் என்னும் இருவரையும் உலகிலுள்ள அரிய சராசரங்களைச் சிருஷ்டிக்கவும் சம்மரிக்கவும் உண்டாக்கினீர். (எ-று.) (க௯)

உ0. வினையிவைனத்தவாவிருப்புடன்வெறுப்பினைவிழையா
உனைவிருப்புடன்வெறுப்புவந்தடைதலென்னுலவாக்
கனைகடற்றடம்புவியினிற்கணிப்பில்பல்வடிவாய்
அனைவயிற்றினிற்கருவடைந்தவதரிப்பானென்.

(இ-ள்.) நல்வினை தீவினைகளைவிட்டு நீங்காத விருப்பையும் வெறுப்பையும் விரும்பாத தேவரீரை விருப்பும் வெறுப்பும் வந்து அடைவதென்னை? நீங்காத ஒலியையுடைய கடல் சூழ்ந்த விசாலமாகிய உலகத்தில் தேவரீர் கணக்கில்லாத பலவுருவையுடையவராய்த் தாய்வயிற்றில் கர்ப்பத்தையடைந்து திருவவதரிப்பது என்? (எ-று.) (உ0)



உக. துதித்துளோர்சிலரெனவருள்சுரப்பதென்றுதியா
மதித்துளோர்சிலரெனப்பொருதழிக்குமாறெவன்கொல்
விதித்தமுத்தொழின்மறுத்துநீவிரும்புவதென்னை
நதித்தடம்பதத்தாயெனமாயவனவில்வான்.

(இ-ள்.) துதித்தவர்களென்று சிலருக்கு அருள் கொடுப்பது என்ன காரணம்? துதியாமல் தமைத்தாமே மதித்தவர்களென்று யுத்தஞ்செய்து சிலரையழிப்பது என்னே? நியமித்ததாகிய சிருஷ்டி திதி சங்காரமென்னும் முத்தொழிலை மறுத்து, தேவரீர் விரும்புவது யாது? கங்காநதியைப் பெற்ற விசாலமாகிய திருவடியையுடையவரே! என்று விண்ணப்பஞ் செய்த அளவிலே ஆச்சரிய குணசேஷ்டிதங்களையுடைய பெருமான் அருளிச்செய்வானாயினன். (எ-று.) (உக)

[எம்பெருமான் விடைபகர்தல்.]

வேறு.

உஉ. விருப்புடன்வெறுப்பிலமேனும்வெண்ணகைப்
பொருப்பிணையெனவளர்புளகக்கொங்கையாய்
தருப்பையங்குலிகரச்சரோருகத்தனும்
பருப்பதத்தனுமருள்வரத்தின்பான்மையால்

(இ-ள்.) வெண்மையான தந்தபங்க்தியையும் மலைகளிரண்டு போலே வளரும் புளகம்போர்த்த தனங்களையுமுடையாய்! நாம், விருப்பும் வெறுப்பும் இல்லைமாயினும் தர்ப்பைப் பவித்திரமணிந்த விரலையுடைய கரத்தோனை பிரமனும், கைலாயமலையையுடைய சிவபிரானும் கொடுக்கும் வரத்தின் தன்மையாலே (எ-று.) (உஉ)

உ௩. மேம்படுகயவரையடவுமேலவர்
தாம்பயின்மகத்துடனறுமங்காக்கவும்
நாம்பவவினையிலாதருளினண்ணியே
தேம்பவனியின்பொறைதீர்த்துமென்றனன்.

(இ-ள்.) அகங்கரித்த துஷ்டர்களைச் சம்மரிக்கவும், மேலோரையும் அவர்கள் செய்யும் யாகத்தையும் தருமங்களையும் காக்கவும், நாம், பிறவிக்கு வேண்டும் வினையில்லாமல், (ஆன்மாக்கள்மீது வைத்த) அருளாலே அவதரித்து, மெலிவடைந்த பூமியின் பாரத்தைத் தீர்ப்போம் என்றருளிச்செய்தனன். (எ-று.) (உ௩)

[மீண்டும் பெரியபிராட்டியார் பிரசினஞ்செய்தல்.]

உ௪. என்றலும்வியந்தனளிறைஞ்சியீசநீ
நின்றளித்தருளுமவ்வுயிர்கணீடவும்
நன்றறிந்துஞற்றியுமெளியநாகமும்
ஒன்றலின்றெங்ஙனம்பெறுவதுன்பதம்.

(இ-ள்.) என்று பெருமான் அருளிச்செய்ய, வியப்படைந்தவராய்ப் பெருமானை வணங்கி, சருவநியாமகரே! தேவரீர் நிலைபெற்று ரக்ஷித்தருளும் அவ்வுயிர்கள், நெடுங்காலம் நன்மையையறிந்து சாதனாநுஷ்டானங்களைச்

செய்தும், எளிதாகிய சொர்க்கத்தையும் பொருந்துவதில்லை; (ஆகவே உயிர்கள்) தேவரீரது பரமபதத்தைப் பெறுவது எப்படி? (எ-று.) (௨௪)

௨௫. உன்னுடைவரமுலகுயிரியாவையும்
மன்னுடையிருவினைமாற்றிமாற்றொணு
நின்னுடைப்பதமெளிதாகநேர்தரப்
பொன்னுடையாய்புகலெனலும்புங்கவன்

(இ-ள்) தேவரீரது அநுக்கிரகத்தாலே, உலகிலுள்ள உயிர்களெல்லாம் தம்மையுற்ற புண்ணிய பாவங்களாகிய இருவினைகளை மாற்றி, மாறுதலில்லாத தேவரீரது பரமபதத்தை எளிதில் அடையும்படி, பீதகவாடையை யணிந்தவரே! அருளிச்செய்வீராக என்று பெரிய பிராட்டியார் கூறியருள, பெருமான் (அருளிச்செய்வானாயினன்.) (எ-று) (௨௫)

[தமிழுக்குச் சாபம் வாய்ந்ததும் அது நீங்கும்பொருட்டு அகஸ்தியர் தவஞ்செய்தபோது எம்பெருமான் தோன்றி வரமளித்து ஆழ்வாராசாரியர்களைப் பூமியில் அவதரிப்பிக்கத் திருவுளம்பற்றியதும்.]

௨௬. நக்கனம்பிகைமணநயத்தல்காண்குவான்
திக்கனைத்திலுமுளதேவர்மாதவர்
புக்கநாட்புடவிதென்புறமிக்கோங்கலால்
அக்கணிமணிமிடற்றசலத்தண்ணலும்

(இ-ள்) நக்கனாகிய சிவபிரான் உமாதேவியைப் பாணிக்கிரகணஞ்செய்துகொள்வதைப் பார்க்கும்பொருட்டு எல்லாத்திக்குகளிலுமுள்ள தேவரும் மாதவரும் வந்து சேர்ந்தபோது, பூமியின் தென்புறம் அதிகமாக மேலெழுந்தமையால் என்புமாலை யணிந்த நீலமணிபோன்ற கரியகண்டத்தையுடையராய்க் கைலைக்குத் தலைவரான சிவபிரான், (எ-று.) (௨௬)

௨௭. கவினிறைவிச்சுவகருமன்றன்னையப்
புவியினைச்சமமுறப்புரிதிபோயெனு
நவிறலுமவனுமானவியந்தாங்கிவாள்
அவிர்மதிமிலைந்தருளரனைப்போற்றியே

(இ-ள்.) அழகுடைய விசுவகர்மாவைப்பார்த்து நீர் சென்று (தென்புறமுயர்ந்த) அந்தப் பூமியைச் சமமாகச் செய்வீராக என்று சொல்லுதலும், அவ்விசுவகர்மாவும், மான் மழுக்களைத் தாங்கி, ஒளிவிடும் சந்திரனை யணிந்தருளிய சிவபிரானைப் போற்றி, (எ-று.) (௨௭)

௨௮. தேவர்மாதவர்கடந்திரளில்யான்முதல்
யாவரோடப்பினும்மியைவதன்றிருட்
டோவலாவுததியுண்டுயர்ந்தமாதவன்
போவனேலடங்குமப்புடவியென்றனன்.

(இ-ள்.) தேவர் மாதவர்களுடைய கூட்டங்களில் நான்முதல் யாவர் தாம் அங்குப்போயினும் அது சமமாகக் கூடுவதன்று. இருட்சி ஒழியாத சமுத்திரத்தையுண்டு (அதினாலே) உயர்ந்தவராகிய பெருந்தவத்தையுடைய அகஸ்தியமாமுனிவர் அங்குப் போவராயின் (மேலெழுந்த) அப்பூமி (முன்போல்) அடங்கும் என்று சொல்லினன். (எ-று.) (௨௮)



௨௯. குறுமுனிவரனையக்குன்றவில்லியும்
உறுதவசேறியென்றுரைப்பவோதருங்
கறுவுடன்விச்சுவகருமன்றன்னையம்
மறுவகன்றுயர்முனிவரனுநோக்கியே

(இ-ள்.) மலையை வில்லாகப்பிடித்த சிவபெருமானும் குறுமுனிவராகிய அகஸ்தியரைப்பார்த்து, மிக்க தவத்தையுடையீர்! (நீவிர், மேலெழுந்த அப்பூமியினிடத்துக்குச்) செல்லுவீராக என்றுகூற, குற்றமற்றுயர்ந்த முனிசிரேஷ்டராகிய அகஸ்தியரும், சொல்வதற்கரிய கோபத்துடன் விசுவகர்மாவைப்பார்த்து, (எ-று.) (௨௯)

௩௦. வரிவிழியுமைதிருவதுவைகாணெனைப்
பிரிதல்செய்நின்குலமுழுதும்பேதமாய்ப்
புரிதொழின்மிகுந்தடைபொருள்சற்றுயவை
இரிகவென்றொழிவிலாச்சாபமீந்தனன்.

(இ-ள்) வரிகள்பரந்த விழியினையுடைய உமாதேவியின் திருக்கலியாணத்தைத் தரிசிக்கும் என்னைப்பிரித்த உன்னுடைய குலமுழுவதும் பேதமாய்ச் செய்யுந்தொழில் அதிகப்பட்டு அதனாற் பெறும்பொருள்கள் அற்பமாய் அப்பொருள்களும் ஒழியக்கடவன என்று ஒழியாத சாபத்தைக் கொடுத்தனர். (எ-று.) (௩௦)

௩௧. கதமுடன்விச்சுவகருமன்றானுநான்
இதநவின்றிடநவையெனவின்றெண்ணுநின்
பதநிறைதமிழ்மறைக்கயலின்பான்மையாப்
புதர்விடுத்திடவெனச்சபித்துப்பொங்கினன்.

(இ-ள்) விசுவகர்மாவும் கோபமுடையனாய், நான் இன்று எல்லோருக்கும் இதமானதைச் சொல்லினேனாகவும் அதைக்குற்றமாக எண்ணிய உன்னாலே பிரவர்த்திப்பிக்கப்பட்ட அழகு நிறைந்த தமிழானது வேதத்துக்குப் புறம்பானதாய்ப் புதர்விடுக்கக்கடவது (விர்த்தியில்லாமற் போகக்கடவது) என்று சாபமிட்டு ஆரவாரித்தான். (எ-று.) (௩௧)

௩௨. பருவரலொடுமுனிபரசுபாணியான்
மருவியெங்கடவுணீவகுத்தசெந்தமிழ்
சுருதியின்புறமதாச்சாபந்தூயவர்
கருதவேவிச்சுவகருமனீந்தனன்.

(இ-ள்) (அவ்வளவிலே) அகஸ்தியமுனிவர் வருத்தத்தோடு பரசாயுதத்தைத் தாங்கிய கரத்தையுடைய சிவபிரான் முன்னரடைந்து எமதுகடவுளே! நீர் அடியேனுக்குச் சொல்லியருளிய செவ்வியதமிழானது வேதத்துக்குப் புறம்பானதாகப் பரிசுத்தர்கள் எண்ணும்படி விசுவகர்மா சாபங்கொடுத்தனன். (எ-று.) (௩௨)

௩௩. எனவிசைத்தகற்றுகென்றிரங்கச்செஞ்சடைக்
கனமழுப்படையுடைக்கடவுளுன்றமிழ்

அனகவேதத்தினுமதிகமாகயாம்
மனமிவர்குவமெனுவரமன்றீந்தனன்.

(இ-ள்) என்றுரைத்து, அச்சாபத்தைப் போக்கவேண்டுமென்று இரங்கிக்கூற, சிவந்தசடையும் பாரமான மழுவாயுதமுமுடைய சிவபிரான் (அகஸ்தியரைப் பார்த்து) நாம் உமது தமிழைப் பரிசுத்தமான வேதத்தினும் அதிகமானதாக மனவிருப்பங் கொள்வோம் என்று அன்று வரங்கொடுத்தனர். (எ-று.) (௩௩)

௩௪. சாகரநுகர்ந்துமிழ்முனியுந்தையலோர்
பாகனைவிடைகொளாமுனைவர்பண்ணவா
மீகரமெடுத்தனர்வியப்பவிந்தமா
நாகநின்றுயர்ந்ததென்றிசையைநண்ணினான்.

(இ-ள்.) சமுத்திரத்தை யுண்டுமிழ்ந்த அகஸ்தியமுனிவர், உமாதேவியை ஓர் பாகத்திலுடைய சிவபிரானிடத்து விடைபெற்று, முனிவர்களும் தேவர்களும் கரங்களை மேலெடுத்து அதிசயிக்க மகாவிந்தமலை நின்றுயர்வடைந்த தென்திசையை யடைந்தனர். (எ-று.) (௩௪)

௩௫. பொதியமால்வரையகம்பொருந்தியத்தமிழ்
விதிவழாதவனியில்விரிக்குங்காலையில்
மதிவழாநமதுபாகவதர்மற்றிது
கதிதாரதெனமறுத்ததனைக்கண்ணுறு

(இ-ள்.) (அகஸ்தியர்) பொதியமால்வரையினிடத்துப் பொருந்தி, அந்தத் தமிழை விதிமுறை தவறாது பூமியில் பிரவர்த்திப்பித்துக்கொண்டு வரும்போது தத்துவஞானம் வழுவாத நமது பாகவதர்கள் இத்தமிழ் மோக்ஷத்தைத் தாராதென்று மறுத்ததைப் பார்த்து, (எ-று.) (௩௫)

௩௬. நூற்றிரண்டாறுடைப்பருவநோற்றெமைப்
போற்றினனிறைஞ்சவப்புனிதன்முன்னர்யாந்
தோற்றினின்செந்தமிழ்சுருதியாக்குதுங்
கூற்றினும்புனிதமாக்கோதில்பாருளோர்.

(இ-ள்.) ஆயிரத்திருநூறு வருஷகாலம் தவஞ்செய்து எம்மைப் போற்றித்துதிக்க, அந்தப்பரிசுத்தராகிய அகஸ்தியருக்கு முன்னே நாம் பிரத்தியக்ஷமாய், வேதத்தை உமது செந்தமிழிற் செய்வோம். (அதனை நாம் சிருஷ்டியாதியில் பிரமனுக்குச்) சொன்ன வேதத்தினும் பரிசுத்தமாகப் பூமியிலுள்ளவர்களும், (எ-று.) (௩௬)

௩௭. முனைவராநமதுபாகவதர்முதுணர்
எனைவரும்விரும்புகவெமக்குமின்பமாப்
புனைகுவந்தளரனீயென்றுபூந்தொடை
வனைகருங்குழலினய்வரமன்றீந்தனம்.

(இ-ள்.) மகாசீலர்களாகிய நமது பாகவதர்களும் முதறிவினையுடைய மற்றவர்களும் விரும்பக்கடவர்கள்; (அத்தமிழை) எமக்கும் இன்பமானதாக அணிவோம்; நீவிர் தளரவேண்டாவென்று பூமாலையால் அலங்கரிக்கும் கரியகூந்தலையுடையாய்! அன்று வரத்தைக்கொடுத்தோம். (எ-று.) (௩௭)

15



௩௮. ஆதலாலைம்படையனந்தன்சேனையோன்
பூதலங்கதிர்மணிவற்சம்பூந்தொடை
ஏதமில்வணைப்புவியுளெய்துவித்
தோதருஞ்சுருதிநூறமிழிலோதவும்

(இ-ள்.) ஆதலால், பஞ்சாயுதங்கள், ஆதிசேஷர் சேனைத்தலைவர் பூமி ?தவி ஒளியையுடைய கௌஸ்துபம் ஸ்ரீவற்சம் வனமாலை குற்றமற்ற பெரிய திருவடி என்ற இவர்களை ஆழ்வாராசாரியர்களாகப் புவியிலவதரிப்பித்துச் சொல்வதற்கரிய வேதநூலைத் தமிழில் சொல்லவும், (எ-று) (௩௮)

தமிழில் சொல்லிய வேதநூலாவது: தமிழ்வேதமும் அதன் அங்கோபாங்கங்களும் அவைகளின் அர்த்தவிசேஷங்களுமாம்.

௩௯. அரங்கமேமுதற்பதியவர்கட்காசிலா
வ்ரங்கொடுத்தவர்களால்வகுத்திலாஞ்சனை
தரங்கியர்துலகஞ்சமயத்துட்படுத்
திரங்குறுதுயர்கதிபெறவுமெண்ணினோம்.

(இ-ள்.) திருவரங்கம் முதலிய திருப்பதிகளில் அவர்களுக்குக் குற்றமில்லாத வரத்தைக்கொடுத்து, அவர்களால் திருவிலச்சனை செய்து உலகத்திலுள்ளோர் கலங்காமல் நமது சமயத்துக்குட்படச்செய்து (வினைகளால்) இரங்காமல் உயர்ந்த மோக்ஷத்தைப் பெறவும் எண்ணங் கொண்டோம். (எ-று.) (௩௯)

இலாஞ்சனை யென்றது: ஒரு மொழியாலும், முதற் [illegible]ப்பாலும், தப்தசங்கசக்ராங்கனம், ஊர்த்துவபுண்டரம், தாஸ்யநாமம், திருமந்திரம், திருவாராதனை என்னும் பஞ்ச ஸம்ஸ்காரங்களெனக் கொள்க.

௪0. எப்பிறப்பினுமவரொய்தியெய்பதஞ்
செப்பியதமிழினைச்செப்பவுன்னினுந்
தப்பிலாதோதினுமவரைச்சாற்றினும்
முப்பிறப்பிகந்துயர்முத்திசேர்குவார்,

(இ-ள்.) எந்தப் பிறவியிலும் பஞ்சாயுதம் முதலியோர் அவதரித்து நமது பதத்தின் விஷயமாகச் சொல்லிய தமிழை (யாரேனும்) சொல்ல நினைத்தாலும், தப்பில்லாமற் சொன்னாலும், அவ்வாழ்வார் ஆசாரியர்களைத் துதித்தாலும் மக்கள் தேவர் நரகர் என்னும் மூவிதப்பிறப்புமின்றி உயர்ந்த முத்தியை யடைவார்கள். (எ-று.) (௪0)

௪௧. என்னநான்முகனுலகுயிரியாவையும்
முன்னமீன்றளித்தருண்முதன்மைமூதலர்
அன்னமுமருமறையதனையுட்கொளா
உன்னருமுவகையோடுறையுங்காலையில்

(இ-ள்.) என்று (பெருமான்) அருளிச்செய்ய, நான்கு முகங்களையுடைய பிரமனையும் உலகத்தையும் உயிர்களையும் மற்றுமுள்ள பிறவற்றையும் முற்காலத்தில் பெற்று ரக்ஷித்தருளும் முதன்மைபெற்ற நித்தியமான தாமரைப்பூவிலெழுந்தருளிய அன்னம்போன்ற பெரியபிராட்டியார் (இந்த) அரிய

இரகசியத்தைத் தம்முட்கொண்டு நினைத்தற்கரிய சந்தோஷத்துட னிரு க்குங்காலத்தில், (எ-று.) (சக)

[சூத்திரவதியார் பெரியபிராட்டியாரைப் பிரசினஞ்செய்ததும் அதற்குப் பெரியபிராட்டியார் விடைபகர்ந்ததும்.]

சஉ. அரியருட்சேனையோன்றேவியஞ்சன
வரிவிழிச்சூத்திரவதிவந்தாடகப்
பரிபுரத்துணையடிப்பசும்பொற்பங்கயத்
தெரிவையைத்திருவடிபணிந்துசெப்புவாள்.

(இ-ள்.) அடியார்களது பாவங்களைப் போக்கும் எம்பெருமானது அரு ணிறைந்த சேனையர்கோனது திருத்தேவியாராகிய மையிடப்பட்டு வரிகள் பரந்த திருவிழியினையுடைய சூத்திரவதியார் வந்து பொன்னாலமைந்த பாதகிண்கிணியை யணிந்த இரண்டு திருவடிகளையுடைய பசுமையான பொற்றாமரைமலரி லெழுந்தருளியிருக்கும் பெரிய பிராட்டியாரைத் திரு வடிபணிந்து விண்ணப்பஞ் செய்வாராயினர். (எ-று.) (சஉ)

சங. சிறப்பின்ஞானக்கொழுந்திகிரியுட்படா
இறப்பதும்பிறப்பதுமெய்திப்பேதைமை
உறப்பொருள்காமமேயுட்கொடுன்பதம்
பெறப்படுந்தவந்நடனறமும்பேணலார்.

(இ-ள்.) சிறப்பையுடைய ஞானமயமாகிய வளம்பொருந்திய ஆக்கினை ச் சக்கரத்துக்கு (அதாவது விதிவிலக்குகளோடுகூடி உமது ஆக்கினையாகிய சாஸ்திரத்துக்கு) உட்படாமல் இறப்பதும் பிறப்பதுமடைந்து அறிவின் மையால் பொருளையும் காமத்தையும் மிகவும் மநோரதம்பண்ணி, உமது திருவடி சித்திக்கும் தவத்தையும் தருமத்தையும் விரும்பமாட்டார்கள்.(எ-று)

சச. ஆதிநாயகியுனதரியநான்மறைநீ
நீதியாய்ந்தனபொருணிலைமைகாண்கிலார்
சோதிமாலிராகவன்முதலதொல்வடி.
வோதினுமுண்மையென்றகத்தினுட்கொளார்.

(இ-ள்.) ஆதிநாயகியாகிய தேவரீரது பெறுதற்கரிய நான்கு வேதங் களிற் சொல்லும் நீதிகளில் ஆராய்ந்தறிந்தனவாகிய பரம்பொருளின் நி லைமையைக் காணமாட்டார்கள். சோதிச்சொரூபனாகிய பெருமையிற் சி றந்த எம்பெருமானது இராகவன் முதலிய பழமையான அவதாரவைப வங்களைச் சொல்லினும் அதனை உண்மையென்று தங்கள் மனத்திற் கொள்ள மாட்டார்கள். (எ-று) (சச)

சரு. தெய்வமுஞ்சுருதியுந்தேவர்மாதவர்
மெய்வழிபுகன்முதுநூலுமெய்கொளார்
மைவருங்கடலுடைமண்ணின்மானிடர்
உய்வருந்தீவினைபுரிவதோய்விலார்.

(இ-ள்) தெய்வத்தையும் வேதத்தையும் தேவர்களும் பெரிய தவத் தையுடையவர்களும் உண்மைவழிப்படி சொன்ன பழைய நூல்களையும் மெ



ய்யாகக் கொள்ளமாட்டார்கள்; கருமையான கடல் சூழ்ந்த பூமியிலுள்ள மனிதர்கள் பிழைத்தற்கரிய தீவினையைச் செய்வது ஓய்தலிலராவர். (எ-று.)

சகா. இத்திறத்துழல்பவரெளிதினெய்தலா
முத்திபெற்றிடுதிறமொழிதியென்றலும்
சித்திரச்சரோருகத்திருவுஞ்செம்மலர்க்
கொத்திலங்கணிமுடிதுளக்கிக்கூறுவாள்

(இ-ள்.) இவ்விதமாக உழலுமவர்கள் எளிதிலடைவதற்கரிய மோக்ஷ த்தையடையும் விதத்தை அருளிச்செய்வீராக என்று விண்ணப்பிக்க, அழகையுடைய தாமரைமலரில் வசிக்கும் பெரியபிராட்டியார் செம்மையான மலர்க்கொத்துக்களணிந்துவிளங்குந் திருமுடியையசைத்து அருளிச்செய் வாராயினர், (எ-று.) (சகா)

சஎ. விருத்தபாதம்பெயர்விதித்துமுன்னைநாட்
டிருத்துநூலதனிற்பாகவதர்சீரெலாம்
கருத்தனிப்பரிசுரைத்ததெனக்காரிகைக்
குருத்தனிமுதறனக்குரைத்ததோதினள்.

(இ-ள்.) முற்காலத்தில், விருத்தப்பாக்களில் தங்கள் பெயரைநாட்டிச் செய்த நூலைப்போல, பகவத்சம்பந்தமுடைய ஆழ்வாராசாரியர்கள் வைபவ ங்களை யெல்லாம் கர்த்தனாகிய பெருமான் இவ்விதமாக உரைத்தருளின னென்று, திவ்வியமங்கள விக்கிரகத்தையுடைய ஒப்பற்ற முதல்வன் தமக் குச் சொல்லியருளியதைப் பெரியபிராட்டியார் சூத்திரவதியாருக்கு அரு ளிச்செய்தனர். ;(எ-று.) (சஎ)

விருத்தப்பாக்களில் தம்பெயர் விதித்து முன்னைநாளில் திருத்திய நூ லாவது: ஸ்ரீவால்மீகிபகவான் விருத்தப்பாக்களா லருளிச்செய்த ஸ்ரீமத் ராமாயணம். அதைப்போல என்றது: பகவதவதாரகுணசேஷ்டிதங்கள் உத்தேசமாவது போல, ஆழ்வாராசாரியர்கள் வைபவங்களும் உத்தேச மாக என்றபடி.

சஅ. மாயவன்றிருவினுக்கிசைப்பமாமலர்த்
தூயவள்சூத்திரவதிக்குச்சொற்றனள்
ஆயவிக்கதையைமாலடியர்தாள்பணிந்
தேயமுற்றவத்தினானியம்புகின்றனன்.

(இ-ள்.) ஆச்சரிய குணசேஷ்டிதனான பெருமான் பெரிய பிராட்டியா ருக்கருளிச்செய்ய, பெருமைபொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கும் பரிசுத்தையான அந்தப்பிராட்டியார் சூத்திரவதியாருக்கு அருளிச்செய்த னர்; அப்படிப்பட்டதான இந்தச் சரித்திரத்தை முற்காலத்தில் திருமா லினடியார்களது திருவடிகளைப் பணிந்து அடைந்த தவத்தினாலே (இப் போது) சொல்லுகின்றேன். (எ-று.) (சஅ)

[இப்பரமபதச்சருக்கத்தில் நூல்வரலாறு உரைத்தலின் இங்கே நூற்பெயரும் அவையடக்கமுங் கூறுகின்றனர்.]

[நூற்பெயர்.]

சகூ. கவிஞர்வானவர்முனிக்கணங்கள்யாவரும்
நவிலருந்தகைமையிக்கதையினமரும்

புவியுயிரனைத்துமீன்றருளம்போருகத்
தவிசிறைன்புகழரிசமயதீபமே.

(இ-ள்.) கவிவல்லோரும் தேவர்களும் முனிக்கூட்டங்களும் (பிற) யா வரும் சொல்வதற்கரிய பெருமையினையுடைய இச்சரித்திரத்தின் திருநாம மாவது பூமியையும் உயிரெல்லாவற்றையு மீன்றருளிய தாமரையாசனத்தை யுடைய பிரமன் புகழும் அரிசமயதீபம் என்பதாம். (எ-று.) (சக)

[அவையடக்கம்.]

ருo. பொருந்தியமொழியெழுத்தின்றிப்போதமுந்
திருந்திலார்கவிபுகன்றிடினுஞ்சீரியோர்
வருந்தியுங்கேட்பவொன்றுரைத்தவாய்மையும்
விருந்தினன்றென்கவிவெறுப்பரோகொலாம்.

(இ-ள்.) நிலைபெற்ற சொல்லிலக்கணமும் எழுத்திலக்கணமும் இன்றி, ஞானமும் திருத்தமாயில்லாதவர்கள் கவிகளைச்சொல்லினும், சிறந்தோர் வருந்தப்பட்டுங் கேட்பார்களென்று (பெரியோர் சொன்ன) உண்மை வா சகமும் விருந்தினும் நன்றாகும். (ஆகவே) அடியேன் சொல்லுங் கவியைப் (பெரியோர்) வெறுப்பரோ? (வெறுக்கார்.) (எ-று.) (ருo)

ருக. பகல்பலகூடியோர்பருஉச்சொற்கூறினும்
அகமலராணங்கருளயலன்றென்பாற்
புகலுமென்கவிதையும்புன்மைத்தென்னினுந்
தகவுடைத்தெனினுமவ்வணங்கைச்சாருமே.

(இ-ள்.) பலநாட்களுங் கூடி ஒரு பெருஞ்சொல்லைச் சொல்லினும் அத மனமாகிய மலரினிடத்தெழுந்தருளியிருக்கும் பெரியபிராட்டியாரது திரு வருளையாம் வேறன்று என்பார்கள். (ஆகையால்) இப்போது சொல்லும் என் கவிகளையும் (பிறர்) அற்பமானவை யென்று சொல்லினும் பெருமை யுடையனவென்று சொல்லினும் அது (என்னுள்ளத்திலிருந்து பிரவர்த்திப் பிக்கும்) அப்பெரியபிராட்டியாரையே சேரும். (எ-று.) (ருக)

வேறு.

ருஉ. சீதரன்றிருவுக்கோதச்செல்வியுஞ்சேனைநாதன்
காதலிக்கிசைத்தலான்மற்றிதற்குயர்கதையொன்றின்றால்
ஆதலினிதனின்மாட்சிதெரிந்துயரறிஞராரோர்
ஏதமில்கதையைக்கூறுமென்மொழிக்குறையுமென்னார்.

(இ-ள்.) திருமகளுநாயகன் பெரிய பிராட்டியாருக்கு அருளிச்செய்ய, அ ப்பெரியபிராட்டியார் சேனைநாயகரது திருத்தேவியாருக்கு அருளிச்செய்த தினால் இதனினும் உயர்ந்த சரித்திரம் வேறொன்றுமில்லை; ஆதலின் இச்சரித் திரத்தின் பெருமையைத் தெரிந்துயர்ந்த அறிஞரானவர்கள் குற்றமற்ற இச்சரித்திரத்தைச் சொல்லும் என் சொல்லின் குறையும் எண்ணமாட்டார் கள். (எ-று.) (ருஉ)

க-வது பரமபதச்சருக்கம் முற்றிற்று.



ஸ்ரீ

## உ-வது ஆதியோகிச்சருக்கம்.

ஆதியோகியரான முதலாழ்வார்கள் மூவரும் அவதரித்தருளின தொண்டைநாட்டுச்சிறப்பு.

க. புண்டரீகத்தயன்படைத்தபூதலத்
தண்டர்பொன்னுடிழிந்தனையபொற்பதால்
எண்டவரிமையவரிறைகொண்மாண்புடைத்
தண்டகமெனும்பெயர்த்தமிழ்நாடரோ.

(இ-ள்.) தேவர்கள் வாழும் பொன்மயமான சுவர்க்கலோகமானது, தாமரைமலரி லிருக்கும் பிரமதேவன் சிருஷ்டித்த பூமியின்கண் இறங்கி னாற்போன்ற பொலிவையுடையதாகும்; எண்ணும் தவத்தையுடையோரும், தேவர்களும் தங்குதலான பெருமையினையுடைய தண்டகமென்னும் பெய ரினையுடைய தமிழ்நாடு. (எ-று.) (க)

உ. திருமலையுறைதருந்தேவனுமுகில்
அருண்மழைபொழிதலாலலகின்ஞானமும்
தருமமுமெனும்பயிர்தழைத்துத்தாவறப்
பொருவில்கைவலமெனும்பலத்தைப்பொங்குமே.

(இ-ள்.) (அந்நாடு) திருவேங்கடமலையினிடத்தில் நித்தியவாசஞ்செய் யும் ஸ்ரீநிவாசனாகிய மேகம், தனது அருளாகிய மழையைப்பொழிதலாலே, கணக்கற்ற ஞானமும் தருமமும் என்று சொல்லப்படும் பயிர்கள் தழைத் தாக், கெடுதலின்றி ஒப்பில்லாத மோக்ஷமென்னும் பலனை விர்த்தியாகக் கொடுக்கும். (எ-று.) (உ)

ங. வேங்கடவரையினும்வேழவெற்பினும்
பாங்கமைபதியினும்பரமன்றாண்மலர்
நீங்கலிலடியரானந்தநீரினால்
ஆங்கடலுவர்க்கடலென்பராய்விலார்.

(இ-ள்.) திருவேங்கடமலையினிடத்தும் திரு அத்திகிரியினிடத்தும் அவற்றின்பக்கலிலுள்ள திருப்பதிகளினிடத்தும் நித்தியவாசஞ்செய்யும் எம்பெருமானது திருவடித்தாமரைகளை விட்டு நீங்குதலில்லாத அடி யார்களது ஆனந்தபாஷ்பத்தாலே யுண்டான கடலை உப்புக்கடலென்று சொல்வார்கள் ஆராய்ச்சியில்லாதவர்கள். (எ-று.) (ங)

ச. ஓவியர்க்கெழுதருமுருவவாணுதல்
நாவியங்குழலினார்நளினநாண்மலர்
வாவியங்கரைபுகவாகப்புள்ளுடன்
தூவியன்னங்களுமளியுஞ்சூழுமே.

(இ-ள்.) (அந்நாட்டில்) சித்திரகாரிகளுக்கும் எழுதலாகாத உருவ மும், ஒளிபொருந்திய நெற்றியும், கஸ்தூரிச்சாந்தணிந்த அழகிய கூந் தலுமுடைய பெண்கள், புதிய தாமரைமலர்கள் பூத்திருக்கும் தடாகங்க

ளின் அழகிய கனாயிற்சேர, சக்கரவாசப்பறவைகளும் இறகுகளையுடைய அன்னங்களும் வண்டுகளும் அவர்களைச்சூழும். (எ-று.) (ச)

மாதர் தனங்களுக்குச் சக்கரவாகமும் நடைக்கு அன்னமும் கண்களுக்கு வண்டும் உவமான மாதலால், தங்களினமோ என்றெண்ணிச் சக்கரவாக முதலியவை அவர்களைச் சூழுமென்க.

ரு. குடம்பொருவிணைமுலைக்கோதைமாதரார்
அடங்கலும்படியவார்க்குதலிளுவியாய்த்
தடங்கரைபுகுதவோர்சலனமின்மையால்
உடம்பெனுமாவிகளுலப்பிலாதன.

(இ-ள்.) கும்பத்தையொத்த இரண்டு தனங்களின்மேல் மாலையணிந்த மாதர்கள் யாவரும் வந்து நீராடுதலால் ஒலிசெய்வனவாகி அதனாலே உயிராய், (நீராடினபிறகு அவர்கள்) கரையிற்பிரவேசிப்பதினால் அசைதலில்லனவாகி அதனாலே (உயிர்நீங்கின) உடம்பென்னுந் தடாகங்கள் கெடுதலில்லாதனவாயிருக்கும். (எ-று.) (ரு)

சு. உமையவளொட்டுநான்கறமுமோய்விலா
தமைவுறவளர்க்குவதந்தநாடெனில்
இமையவருலகமுமிணையன்றுவிளிச்
சமைவுதெவ்வுலகிதற்குவமைசாற்றவே.

(இ-ள்.) உமாதேவியார் முப்பத்திரண்டு தருமங்களையும் ஒய்தலின்றி அமைதிபெறும்படி வளர்ப்பது அந்த நாடே என்றால், தேவலோகமும் அதற்கு ஒப்பாவதன்று. ஆகையால் இனி இதற்குச் சமானமாகச் சொல்லப்பொருந்துவது வேறெந்தவுலகம்? (எ-று.) (சு)

எ. எண்டவாவிடுகுறியேதுமேபொருள்
கண்டதாற்புலமையீர்காரணத்தினன்
அண்டர்கோன்பரவருளாளன்கச்சிமால்
தொண்டைநாடதன்பெயர்தொன்றுதொட்டரோ.

(இ-ள்.) அறிவு நிறைந்தவர்களே! (அந்நாட்டின் பெயர், தொண்டர்கள் வாழும் நாடு எனப்) பொருள் காணப்படுதலின் அக்காரணத்தால் தொன்றுதொட்டே, அதன் பெயரானது பிரமதேவன் வணங்கும் பேரருளாளனைத் திருக்கச்சியிலெழுந்தருளிய பெரியோனது (தொண்டர்கள் வாழும்நாடு) தொண்டைநாடு என்பதாம். ஆகவே அதனை என்னுதல் கெடாத இடுகுறி என்னுதல் பொருந்துமோ. (எ-று.) (எ)

தொண்டு என்பது ஐகாரச்சாரியை பெற்றுத் தொண்டை என்றாகும். தொண்டு-விகுதியேலாத தொழிற்பெயர். இது ஆகுபெயராய்த் தொண்டரை யுணர்த்திற்று. இவ்வாறுகொண்டது கவிசமத்காரம். தொண்டநாடு என்றிருப்பினும் பொருள் அதுவேயாம்.

அ. விட்டுவான்வெயிற்குலராதுவெஃகிநீர்
ஊட்டுவானுதவிதேர்ந்துலப்பிறுருவுங்
கோட்டுவான்மலர்பலங்கொடுக்குமென்னிலந்
நாட்டுவாழ்மாந்தர்சீர்நவிலற்பாலதோ.



(இ-ள்.) (அந்நாட்டின்கணுள்ள) கெடுதலில்லாத மரங்களும், தம்மை வெட்டுவோன் வெயிலினால் வாடாமற்காத்து, (தமக்கு) நீர்விடுவோனது உதவியையறிந்து, (தமது) கிளைகளில் உயர்ந்த மலர்களையும் பழங்களையுங் கொடுக்குமென்றால், அந்நாட்டில் வாழும் மக்களின் உயர்ந்த குணம் சொல்லக்கூடியதோ? (எ-று.) (அ)

கூ. நகிற்கொடிமருங்குலந்நாட்டுமாதரார்
அகிற்புகைகுழற்கிடவஃதுமீதளாய்
முகிற்கணத்தடைதலான்முகிலும்வாயிதழ்
துகிர்க்கிணைவனிதையர்குரியற்கேய்ந்தவே.

(இ-ள்.) தனபாரத்தால் அவளும் இடையினையுடைய அந்நாட்டுப் பெண்கள், தங்கள் கூந்தலுக்கு அகிற்புகையூட்ட, அப்புகையானது மேலெழுந்து மேகக்கூட்டங்களோடு சேர்தலாலே, அந்தமேகங்களும், பவளத்தையொத்த வாயிதழையுடைய பெண்கள் கூந்தலுக்கு ஒப்பாயின. (எ-று.) (கூ)

க0. நாலிருதிசையினும்பரந்துநாகமீ
தாலியம்முகிறரப்பெருகியம்புவி
மாலிகைமார்பினுத்தரியமானுதண்
பாலிமாநதிபயம்பரவுபண்ணைத்தே.

(இ-ள்.) முன்சொன்ன மேகங்கள் எட்டுத்திசைகளிலும் பரவி, ஆகாயத்திலிருந்து மழைத்துளிகளைப்பெய்தலாலே, அழகிய பூமிப்பிராட்டியாரது மார்பிலுள்ள மாலையையும் உத்தரியத்தையும் ஒக்கும் குளிர்ச்சியையுடைய பாலாறு பெருக்கெடுத்து நீர் பாயுங் கழனிகளையுடையது (அந்நாடு.) (எ-று.) (க0)

கக. மீற்கணமருள்விழிவிமலைகேள்வனும்
மாற்கணியகமதாவயங்குவாரியும்
நாற்கவிபுகழுமந்நதிபுக்கார்தலாற்
பாற்கடலெனும்பெயர்படைத்ததென்பவே.

(இ-ள்.) கெண்டைமீனினங்கள் மருளுந் திருக்கண்களையுடைய பரிசுத்தையான பெரியபிராட்டியாருடைய நாயகனான எம்பெருமானுக்கு அழகிய இருப்பிடமாக விளங்கும் சமுத்திரமும், ஆசு மதுரம் வித்தாரம் சித்திரம் என்னும் நாலுகவிகளில் வல்லவர்கள் புகழும் அந்தப் பாலாறு புகுந்துநிறைதலாலே, பாற்கடல் என்னும் பெயரைப் படைத்ததென்று சொல்லுவர் (பெரியோர்). (எ-று.) (கக)

## பொய்கையாழ்வார்

### திருவவதாரஸ்தலமான திருக்கச்சிமாநகரச்சிறப்பு.

வேறு

க௨. இனையசீர்கெழுபாலிமாநதிமருங்கிமையோர்
முனைவர்வேதியர்விபுதர்நாற்கவிஞரோமுதலோர்
அனைவரும்பகுத்தளக்கொணுவளத்ததாமலர்பூ
நனைவரும்பொழில்புடைசெறிகச்சிமாநகரம்.

(இ-ள்.) இப்படிப்பட்ட சிறப்பு மிகுதியையுடைய பாலாற்றின் சமீபத்திலே தேவர்கள், முனிவர்கள், வேதியர்கள், மிகக்கற்றோர், நாலுகவிகளில் வல்லவர்கள் முதலிய அனைவரும் பிரித்துச் சொல்வதற்கரிய வளப்பத்தையுடையதாகும்; மலர்ந்த புஷ்பம் தேனைச்சொரிவதான சோலைகள் பக்கங்களில் நெருங்கப்பெற்ற பெருமைபொருந்திய திருக்கச்சிநகரம். (எ-று.) (கஉ)

நதிமருங்கு அளக்கொணு வளத்தது கச்சிமாநகரம் எனக்கூட்டுக.

கங. இணையிலாமுதற்பரம்பொருள்பலவடிவெடுத்தாங்
கணையுந்தன்மையிற்சங்குசக்கரம்புயத்தமைத்துப்
பிணையல்வண்டுளவந்திருநாமநூல்பிறங்குந்
துணைமலர்ப்பதப்பரமபாகவதராற்றுலங்கும்.

(இ-ள்.) தனக்குவமையில்லாத சிறந்த காரணப்பொருளானவன் பல திருவுருவங்கொண்டு அவ்விடத்தில் சேர்ந்திருக்குந் தன்மைபோலே, சங்கு சக்கரங்களைத் (தங்கள்) திருத்தோள்களி லமைத்துக்கொண்டு வளப்பமான திருத்துழாய் மாலையும் திருநாமமும் திருப்பவித்திரமும் விளங்கப்பெற்றவரான இரண்டு திருவடித்தாமரைகளையுடைய பரம பாகவதர்களாலே பிரகாசித்துக் கொண்டிருக்கும் (அந்நகரம்). (எ-று.) (கங)

இங்கு பாகவதர்களின் திருவடியைக்குறித்தது "நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய, பாதநாளிபடுதலாலிவ் வுலகம்பாக்கியஞ் செய்ததே" என்னும் அருளிச்செயலின்படி இடத்தின் தூய்மையை விளங்கவைத்தற்கென்க.

கச. அருமைநான்மறையநனிறும்புராணத்துமகன்ற
பொருண்மைசேருமாகமங்கள்சாத்திரத்தினும்புயல்போற
கருமைமேனியன்செய்யதாமரைப்பதங்காட்டும்
பெருமைசேர்திருவாய்மொழியோதையேபெருகும்.

(இ-ள்.) கற்பதற்கும் பொருளை யறிந்துகொள்வதற்கும் அருமையாய் நாலுவகையான வேதங்களைக்காட்டிலும் புராணங்களைக்காட்டிலும் விரிவான பொருளமைந்த ஆகமங்களைக்காட்டிலும் (வேறு) சாஸ்திரங்களைக் காட்டிலும், மேகம்போலக் கரிய திருமேனியையுடைய பரந்தாமனது சிவந்த தாமரை போன்ற திருவடிகளை (எளிதில்) காட்டிக்கொடுக்கும் பெருமையினையுடைய திருவாய்மொழியின் (பாராயண) ஓசையே (அந்நகரில்) விசேஷித்திருக்கும். (எ-று.) (கச)

கரு. மாடைபன்மணிகவரிதேர்நெருங்கணிமறுகும்
மேடைபொற்றுகிற்கொடிமதில்கோபுரம்விரைப்பூ
ஓடைபூகதத்துடவைநந்தனவனமொளிர்பொன்
ஆடைமங்கையராடரங்களப்பிலவமையும்.

(இ-ள்.) பொன்னலமைந்த பலமணிகளையுடைய சாமரைபொருந்திய தேர்கள் நெருங்கும் அழகிய வீதிகளும், மேடைகளும், அழகிய துகிற்கொடிகளையுடைய மதில்களும், கோபுரங்களும், மணங்கொண்ட புஷ்பங்கள் மலர்ந்த ஓடைகளும், கமுகவரிசைகளையுடைய உழவுக்கொல்லைகளும், நந்தனவனங்களும், பிரகாசிக்கும் பொன்னுடையையணிந்த மங்கையர் நடனஞ்செய்யும் நாடகசாலைகளும் கணக்கில்லாதனவாய்ப் பொருந்தியிருக்கும். (எ-று.)



[எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஹஸ்திகிரி.]

கசு. எந்தமாநகரமுமிந்தமாநகர்க்கிணையின்
றந்தமாநகர்காண்குவாமெனவுளத்தமையாச்
சுந்தரத்துடனெழுந்ததேபோலமீத்துலங்கும்
மந்தரத்தினற்கடல்கடைந்தோன்கரிமலையே.

(இ-ள்.) பெருமையையுடைய எந்த நகரமும் இந்தப் பெரிய திருக்கச்சிநகருக்குச் சமானமாவதில்லை: (அங்ஙனம் சமானமாகக்கூடியதுளதாயின்) அதனைக்காணக்கடவோமென்று நினைத்து அழகோடு மேலோங்கியதுபோல உயர்ந்து விளங்கியிருக்கும்; மந்தர மலையினாலே திருப்பாற்கடலைக்கடைந்த எம்பெருமானது ஸ்ரீஹஸ்திகிரி. (எ-று.) (கசு)

கஎ. ஆயவையமாளிகைவயினயன்மகமயர்நாட்
டேயவுத்தரவேதிகின்றெம்பிரான்றோன்ற
மேயபுண்ணியகோடிவான்மணிவெயில்விரிப்பச்
சேயவானவர்வணங்கிடவிளங்குமத்திகிரி.

(இ-ள்.) பிரமதேவனது நியமத்தின்படி விசுவகர்மாவினால் உண்டான வையமாளிகையென்னும் சிறந்த இடத்தில் பிரமதேவன் யாகஞ்செய்யும் போது பரிசுத்தமான (உத்தரவேதி) வடக்கின்கண்ணமைந்த யாககுண்டத்திலிருந்து எமக்கு உபகாரகனை பேரருளாளப்பெருமான் ஆவிர்ப்பவித்தருளவும், பொருந்திய புண்ணியகோடி விமானமானது உயர்ந்த ரத்தின ஒளியை வீசவும் விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் வணங்கவும் அந்த ஸ்ரீஹஸ்திகிரியானது விளங்கிக்கொண்டிருக்கும். (எ-று.) (கஎ)

[பொய்கையாழ்வார் திருவவதாரம் பண்ணின பொற்றாமரைப் பொய்கை.]

கஅ. கதிரினேழ்பரிமாமணியிரதமுங்கடவுள்
மதிவிமானமுங்கடக்கொணவம்மலைமதில்சூழ்
முதிரும்பன்மணிக்கோயில்வாழ்முகிலினைமுதிர்ந்த
கதியினதனைக்கண்ணனைக்கருணைவாருதியை

(இ-ள்.) சூரியனது ஏழு குதிரைகள்பூண்ட பெரிய இரத்தினமயமான தேரும் தெய்வத்தன்மையுள்ள சந்திரனது விமானமும் கடப்பதற்கரிய அந்தக் கரிகிரியில் மதில்களாற் சூழப்பெற்ற முதிர்ந்த பல மணிமயமான திருக்கோயிலில் நித்திய வாசஞ்செய்யும் மேகம்போன்றவனை, முதிர்ந்த கதியாகிய மோக்ஷத்துக்குத் தலைவனை, கண்ணனை, கருணைக்கடலை, (எ-று.) ()

ககூ. வையமாமயின்மகிணனைமாயனைமணிப்பூஞ்
செய்யதாமரையுறைபெருந்தேவிநாயகனைத்
துய்யநான்முகன்றவத்தினற்றோன்றுமாதவனைப்
பையராவணைப்பாற்கடற்றுயில்பராபரனை.

(இ-ள்.) பெருமைபொருந்திய மயில்போன்ற பூமிப்பிராட்டியாருக்குக் கணவனை, மாயனை, பொகுட்டையுடைய அழகிய சிவந்த தாமரைமலரில் எழுந்தருளியிருக்கும் பெருந்தேவித் தாயாருக்கு நாயகனை, பரிசுத்தமாகிய பிரமனது தவத்தினால் ஆவிர்ப்பவித்த மாதவனை, படங்களையுடைய திருவனந்தாழ்வானாகிற அணையின்மீது திருப்பாற்கடலில் அறிதுயிலமரும் பராபரனை, (எ-று.) (ககூ)

௨௰. வணங்குநான்முகன்வாசவன்முனிவரர்வானோர்
கணங்கடோய்வதுகதிதருகிற்பதுகருணைக்
குணங்களாலுயர்மாதவனருளெனக்குளிர்ந்த
தணங்குதீர்ப்பதுக்கோயிலின்குடதிசையதுவால்

(இ-ள்.) வணங்கும் பிரமனும், இந்திரனும், முனிவர்கள் தேவர்களின் கூட்டங்களும் நீராடுவது; மோக்ஷந்தரவல்லது; கருணைக் குணங்களாலுயர்ந்த பெரியபிராட்டியாருக்கு நாயகனது திருவருள்போலக் குளிர்ந்தது; (பிறவி) வருத்தத்தை நிவர்த்திப்பது; எம்பெருமானெழுந்தருளிய அத்திருக்கோயிலின் மேற்குத்திக்கிலிருப்பது; (எ-று.) (௨௰)

௨௧. நீலந்தாமரைகுமுதமேமுதலியநெருங்கிச்
சிலஞ்சால்வயிணவருளமெனநனிதெளிந்து
கோலஞ்சார்மடநடையனமளியினங்குலவும்
ஞாலஞ்சால்புறவிளங்குபொற்றாமரைநளினி.

(இ-ள்.) நீலோற்பலம் தாமரை அல்லி முதலிய மலர்கள் நெருங்கி, ஞானவொழுக்கங்களையுடைய ஸ்ரீவைஷ்ணவர்களது திருவுள்ளம்போல மிகத்தெளிவடைந்து, அழகிய இளமையான நடையையுடைய அன்னக் கூட்டங்களும் வண்டுக்கூட்டங்களும் பொருந்தி, உலகம் மேன்மையடையும்படி விளங்கியிருக்கும் பொற்றாமரைப்பொய்கை. (எ-று.) (௨௧)

நளினி-தடாகம். நளினமிருந்தற்குரியது நளினி. நளினம்-தாமரை. இங்கே தாமரைநளினியென்றது 'சேற்றிற்பங்கயம்' என்பதுபோல.

௧௮-வது முதல் இதுவரையில் உள்ள நான்கு பாக்களும் ஒரு தொடர். கோயில்வாழ் முகிலினை நாதனை பராபரனை வணங்கும் கணங்கள் தோய்வது, கதிதருகிற்பது, குளிர்ந்தது, கோயிலின் குடதிசையது பொற்றாமரை நளினி எனக் கூட்டுக.

[பொய்கையாழ்வார் திருவவதாரம்.]

வேறு

௨௨. வளங்கெழுமினையபொய்கையினின்மாதவன்
உளங்கெழூமாமலருநித்தசோமனிற்
றுளங்கவிறிருக்கரப்பணிலந்தூநறைத்
தளங்கொடாமரையினோர்தனயனாகியே.

(இ-ள்.) மிக்க வளங்கொண்ட இத்தகைய பொற்றாமரைத்தடாகத்தில், தேனையும் இதழையுமுடைய பரிசுத்தமான (ஓர்) பொற்றாமரைமலரில், (எம்பெருமானது) களங்கமற்ற திருக்கைகளிலணிந்த ஸ்ரீபாஞ்சஜந்நியாழ்வான், மாதவனது கலியாணகுணங்கள் நிறைந்த திருவுள்ளமாகிய பெருமை பொருந்திய மலரில் உதித்த சந்திரனைப்போலே ஒரு குழந்தையாகி, (எ-று.) (௨௨)

௨௩. துலைமதியோணமாந்தூயநாட்புகழ்
நிலைபெறத்தோன்றியங்கழுதநீள்குரல்
சிலைமுகில்கச்சிமால்செவியிற்சார்தலும்
உலைவில்சீர்க்கருடன்மீதொல்லையெய்தினான்.



(இ-ள்.) ஐப்பசி மாதத்தில், திருவோணமாகிய பரிசுத்தமான நக்ஷத்திரத்தில், தம்முடைய புகழானது நிலைபெறும்படி திருவவதாரஞ்செய்து அங்கிருந்தழுத பெருங்குரலானது, வில்லிட்டிருக்கும் மேகம்போலே திருக்கச்சியி லெழுந்தருளியிருக்கும் எம்பெருமானது திருச்செவியிற் சேர்ந்தவுடன் (அவ்விறைவன்) கெடுதலில்லாத சிறப்பினையுடைய பெரிய திருவடியின்மீதேறி விரைவாக அங்கு எழுந்தருளினன். (எ-று.) (௨௩)

ஒரு தொடரான மேலிரண்டு பாக்களையும் வளங்கெழும் பொய்கையில் தாமரையகச் சோமனைப்போல, ஓர் தனயனாகி அழுதகுரல் செவியிற் சார்தலும் கச்சிமால் கருடன்மீது ஒல்லை யெய்தினான் எனக்கூட்டுக.

[பொய்கையாழ்வார் அருள்பெறுவது.]

௨௪. புங்கவர்மலர்மழைபொழியமாதவர்
எங்கணுமிறைஞ்சிவாழ்த்தெடுப்பவேட்டலர்
பங்கயமலர்மிசைத்தோன்றும்பாலனைச்
செங்கரத்தெடுத்தணியாகஞ்சேர்த்தினன்.

(இ-ள்.) தேவர்கள் பூமாரிபொழியவும் பெருந்தவத்தையுடையோர் எங்கும் வணங்கிவாழ்த்தவும் இதழ்கள் விரிந்த பொற்றாமரைமலரில் அவதரித்த (அந்தப்) பாலனை (கச்சிமால்) தன் சிவந்த திருக்கைகளாலெடுத்து அழகிய திருமேனியில் அணைத்தருளினன். (எ-று.) (௨௪)

௨௫. வண்டறுமலர்க்குழல்வனசமங்கைநீ
கொண்டணிமுலையருத்துகெனக்கோதையுந்
தண்டளிர்க்கரங்கொளாவருத்தத்தானமிர்
துண்டனன்றினம்புதிதுண்ணுங்கீர்த்தியான்.

(இ-ள்.) (பிறகு பெரியபிராட்டியாரைக்கடாக்ஷித்து) வண்டுகள் நீங்காத மலர்களையணிந்த கூந்தலையுடைய தாமரைமலரிலிருக்கும் மங்கையே! (இந்தப்பாலனை) நீ எடுத்துக்கொண்டு (நினது) அழகிய முலையூட்டுவாயென் றருளிச்செய்யப் பெரியபிராட்டியாரும் குளிர்ந்த தளிர்போன்ற திருக்கைகளிற்கொண்டு திருமுலையூட்டவே தினமும் புதிதுபடும் பிரபாவமுடைய அப்பாலன் உண்டனர். (எ-று.) (௨௫)

௨௬. நாமமும்பொய்கையென்றிசைத்துநாரணன்
ஏமமாமருமறையியம்பிச்செந்தமிழ்ப்
பாமறைநவில்கெனப்பரிந்துகேட்டனன்
காமமும்வெகுளியுங்கடிந்தகாட்சியான்.

(இ-ள்.) பெருமான், (அப்பாலனுக்குப்) பொய்கையார் எனத் திருநாமஞ்சார்த்தி, நிரதிசய இன்பந்தரும் அரிய ரகசியார்த்தங்களை யருளிச்செய்து, செந்தமிழ்ப்பாக்களாலே வேதார்த்தங்களைச் சொல்லக்கடவாயென் றருளிச்செய்ய, காமத்தையும் வெகுளியையுங் கோபித்த ஞானக்கண்களையுடைய பொய்கையாழ்வார் விரும்பிக்கேட்டனர். (எ-று.) (௨௬)

௨௭. எண்ணிலாமுனிவரரமரரேத்திட
மண்ணியபொன்மதில்வளாயமாமணிப்

புண்ணியகோடியாம்விமானப்பூதர
நண்ணினன்கேடிலாவரமுநல்கினன்.

(இ-ள்.) (அதன்பின்னர்) கணக்கற்ற முனிசிரோஷ்டர்களும் தேவர்களும் துதிக்க அலங்கரித்திருக்கும் பொன்மயமான மதில்சூழ்ந்த பெருமை பொருந்திய இரத்தினமயமான புண்ணியகோடி விமானம் பொருந்திய ஸ்ரீஹஸ்திகிரியிலெழுந்தருளிய பெருமான் ஆழ்வாருக்குக் கேடில்லாத வரத்தையுங் கொடுத்தருளினன். (எ-று.) (உஎ)

உஅ. வரம்பெறுபொய்கையும்வணங்கிவாழ்த்திமால்
அரங்கமேமுதற்பதியனைத்துமாரண
நிரம்பியதமிழினனிகழ்த்தினைருள்
பரம்பபூதன்பவம்பகருவாமரோ.

(இ-ள்.) (இப்படி) வரத்தைப்பெற்ற பொய்கையாழ்வாரும், (பேரருளாளனை) வணங்கி வாழ்த்தி, (விடைபெற்றுக் கொண்டுபோய்) திருமால் எழுந்தருளியிருக்கும் திருவரங்கம் முதலிய எல்லாத் திருப்பதிகளிலும் வேதார்த்தங்கள் நிறைந்த தமிழ்ப்பாக்களையருளிச்செய்தனர். (இனி ஆன்மாக்கள் விஷயத்தில்) திருவருள் பாய்ச்சிய பூதத்தாழ்வாரது திருவவதார வைபவத்தைச் சொல்லுவோம். (எ-று.) (உஅ)

## பூதத்தாழ்வார்

திருவவதாரஸ்தலமான திருக்கடன்மல்லைச் சிறப்பு.

வேறு

உகூ. அறைந்தமாதிருக்கச்சிசூழ்தொண்டைநாடதனில்
நிறைந்தவாருதிதீரத்தினீலமேகம்போல்
உறைந்தநாயகன்றிருப்பதியூழிபேர்வுறினும்
மறைந்திடாதுமிக்குயர்புகழ்த்திருக்கடன்மல்லை.

(இ-ள்) முன் சொன்ன திருமாலினது திருக்கச்சிநகரைச்சூழ்ந்த தொண்டைநாட்டில், நிறைவுற்ற சமுத்திர தீரத்தில், நீலமேகம்போல நித்தியவாசம்பண்ணும் இறைவனது திருப்பதியாகும்; ஊழிகாலம் பெயர்ந்தாலும் மறையாமல் மிகவுமுயரும் புகழையுடையதான திருக்கடன்மல்லை. (எ-று.)

ஙo. போதவேதியர்வேள்வியங்கியிற்சொரிபொரிபோற்
சீதவெண்டிரைதுரிர்வனத்தாரங்கள்சிதற
மீதமர்ந்தபுட்குலமிரீஇப்புகையின்மீவிரியாக்
கேதகைக்கிளர்வனம்புகாத்துயில்வளங்கெழுமும்.

(இ-ள்.) (அத்திருப்பதியானது) ஞானமுடைய வேதியர்கள் யாகாக்கினியிற் சொரியும் பொரியைப்போலே குளிர்ந்த வெண்மையான அலைகளானவை பவளக்காட்டில் முத்துக்களைச்சிதற, (அதனாலே அந்தப் பவளக்காட்டின்) மேல் பொருந்தியிருந்த பறவைக்கூட்டங்கள் அஞ்சியோடி, புகைபோல ஆகாயத்தில் பாவி, உயர்ந்த தாழைவனத்திற் புகுந்து துயிலுதற்குக் காரணமான வளப்பம் நிறைந்திருக்கும். (எ-று.) (ஙo)



ஙக. மணியுஞ்செம்பொனுமுத்தமுஞ்சந்தமுமணியால்
அணியுமஞ்சிகைமான்மதத்தொடுநறையகிலும்
பணியும்வெண்ணிறப்பளிதமும்பற்பலகலையுந்
தணியுமாவணத்தொலிதிரையொலியினைத்தடுக்கும்.

(இ-ள்.) இரத்தினங்களும், சிவந்த பொன்னும், முத்தும், சந்தனமும், மணிகளால் அழகுபெறச் செய்த பெட்டியிலிருக்கும் கஸ்தூரியும், வாசனையுடைய அகிலும், ஆபரணங்களும், வெண்ணிறமுடைய கருப்பூரமும், பலவகையான ஆடைகளும் பொருந்திய கடைகளிலுள்ள ஓசையானது, கடலினோசையைத் (தன்னிலும் மிகாதபடி) தடுக்கும். (எ-று.) (ஙக)

[பூதத்தாழ்வார் திருவவதாரம் பண்ணின தடாகம்.]

ஙஉ. இனையமல்லையம்பதிவயினெம்பிரானெழிலைப்
புனையும்வாவியொன்றரவிந்தங்குவளைகள்பொதுளி
வினையியாவையுங்கடிந்துமாலடிபணிவிமலர்
நினைவினாழ்ந்தவர்புரியுமாதவத்தினீர்நிறையும்.

(இ-ள்.) இப்படிப்பட்ட திருக்கடன்மல்லையில், எம்பெருமானது அழகைக்கொண்ட தடாகமொன்று, தாமரை நீலோத்பலங்கள் தழைத்து, எல்லா வினைகளையுங் கடிந்து, ஸ்ரீயப்பதியின் திருவடிகளைப்பணியும் மலரகிதரான பாகவதர்களது திருவுள்ளம்போல கம்பீரஸ்வபாவமுடையதாய், அவர்கள் செய்யும் மகத்தான தவத்தைப்போலப், பரிசுத்தமான நீர் நிறைந்திருக்கும். (எ-று.) (ஙஉ)

[பூதத்தாழ்வார் திருவவதாரம்.]

ஙங. அலையினைப்பொருவத்தடாகத்திடையணிபொற்
கலையினைப்புனையெம்பிரான்றிருக்கதைகடற்பார்
நிலையினிற்றமிழ்மறைமுறைநிறுவுவானினையா
மிலைதருங்கருநீலமாகரமதாவிரும்ப

(இ-ள்.) (விசாலத்தால்) கடலுக்குச் சமானமாகிய அத்தடாகத்தினிடத்து, அழகிய பொன்னாடையைத்தரிக்கும் எம்பெருமானது அழகிய கதாயுதாழ்வான், பூமியினிடத்துத் தமிழ்வேதத்தை முறையாக நிறுவத் திருவுள்ளங்கொண்டு, (எம்பெருமான்) அணியும் கரிய நீலோத்பலமலரை தமது திருவவதாரத்துக்கு) இடமாக விரும்பிக்கொள்ள, (எ-று.) (ஙங)

ஙச. கருத்தனுங்கிவெவ்வினைநனிதுனுக்கொடுகலங்க
திருத்தநல்வினைதமிழ்மறையகவயினிறைப்
பெருத்தபூதமொத்தமுழுகுரற்றிசைதொறும்பிறங்க
உருத்தசெங்கதிரொனவதனிடைமைந்தனுதித்தான்.

(இ-ள்.) பூமியினிடத்துக் கொடிய வினையானது மனம் வருந்தி மிகுந்த அச்சத்துடன் கலக்கமடையவும், நல்வினையும் தமிழ்வேதமும் தாண்டவம் புரியவும், பெரியபூதம்போன்று அமுங்குரலானது திசைகள்தோறும் நிறைய, உதயமான சிவந்த சூரியன்போல அம்மலரில் ஒருகுழந்தையாகத் திருவவதாரஞ்செய்தனர். (எ-று.) (ஙச)

பூதமொத்து என்றது 'பூ ஸத்தாயாம்' என்கிற தாதுவின்படி எம்பெருமானால் ஸத்தை (நிலைமை) பெற்றவர்போல என்பது தோன்றவென்க.

[பூதத்தாழ்வார் அருள்பெறுவது.]

௧௫. விளங்குமைப்பசியவிட்டத்துவேதமோர்நான்கும்
உளங்குலாவவந்துதித்தவம்மதலையையுலவா
வளங்குலாமல்லைமாதவன்வந்தெடுத்தருளாற்
றளங்கொடாமரைத்தையல்கைத்தலத்தினிலளித்தான்.

(இ-ள்.) விளங்கும் ஐப்பசிமாதத்தில், அவிட்டநக்ஷத்திரத்தில், நான்கு வேதங்களும் மனங்களிக்க வந்தவதரித்த அக்குழந்தையை, கெடாத வளம் பொருந்திய திருக்கடன்மல்லையி லெழுந்தருளியிருக்கும் திருமால் வந்து எடுத்துக்கொண்டு, கிருபையோடு, இதழ்களையுடைய தாமரைமலரிலிருக்கும் பெரியபிராட்டியார் திருக்கைகளில் கொடுத்தருளினன். (எ-று.) (௧௫)

௧௬. கொடுத்தலும்புவியனைத்துமீன்றருண்மலர்க்குயிலும்
எடுத்துமார்பகத்தணைத்தணியிணைமுலையருத்தா
விடுத்தவக்கணத்தெம்பிரான்றிருப்புகழ்விரிக்கத்
தொடுத்தனன்பெயர்பூதவென்றமலனுஞ்சொற்றான்.

(இ-ள்.) (அங்ஙனம் பெருமான்) கொடுத்தவளவிலே உலகமெல்லா மீன்றருளும், தாமரை மலரிலிருக்கும் குயில்போன்ற பிராட்டியாரும் எடுத்துத் திருமார்பிலணைத்துக்கொண்டு அழகிய இரண்டு தனங்களும் ஊட்டி விடுத்த அந்த க்ஷணத்தில் (ஆழ்வார்) எம்பெருமானது திருப்புகழை விரிக்கத் தொடங்கினர். மலரகிதனான பெருமானும் (அவருக்குப்) பூதத்தார் எனத் திருநாம மமைத்தருளினன். (எ-று.) (௧௬)

௧௭. பரிவினோக்கியக்குமரனைப்பின்னரும்பரமன்
விரிதருந்தமிழ்த்தொடையினம்மதப்புகழ்விளம்பென்
றரியநல்வரமளித்தகன்றனனுநன்மொனும்
தெரிவருந்தகைத்திருப்பதியெங்கணுந்திரிந்தான்.

(இ-ள்.) பரமன், பின்னரும் அக்குழந்தையைப் பிரீதியோடு கடாக்ஷித்து, (பொருள்) விரிவையுடைய தமிழ்ச்செய்யுட்களால் நமது பரத்தின் புகழைச் சொல்வாயாகவென்று உரிமையான நல்வரமளித்து மறைந்தருளினன். ஞானவலிமையையுடைய ஆழ்வாரும், தெரிவதற்கரிய பெருமையுடைய திருப்பதிகளெல்லாந் தரிசித்து யாத்திரைசெய்தனர். (எ-று.) (௧௭)

## பேயாழ்வார்

திருவவதாரஸ்தலமான திருமயிலைச்சிறப்பு.

௧௮. பூதனிப்பரிசமைந்தனன்பொருவில்பொற்புரிசை
மீதமைத்தபைங்கதலிகைவிசும்பளாய்விரைதேர்
ஆதவற்கமைகால்செய்வட்டத்தினிலசையும்
மாதவத்தர்வாணகர்கடன்மருங்கரின்மயிலை.

(இ-ள்.) பூதத்தாழ்வார் இவ்விதமாயிருந்தனர். ஒப்பில்லாத அழகிய மதில்களின்மேல் நாட்டிய நல்ல பசிய கொடிகள் ஆகாயத்தையளாவி, விரைந்து செல்லுந் தேரையுடைய சூரியனுக்கு அமைந்த விசிறியைப்போல



அசைவதற்கிடமாய், மாதவத்தோர் வாழும் நகரமாய், கடலுக்குச் சமீபத்திலிருப்பது திருமயிலையாகும். (எ-று.) (௧௮)

[பேயாழ்வார் திருவவதாரம் பண்ணின திருக்குளம்.]

௧௯. நற்றவர்க்கிடமாயவந்நகர்வயினறைதேன்
றுற்றவாம்பனீலோற்பலந்தாமரைதுவன்றிக்
கொற்றமாறிருக்கச்சியின்குணதிசைநவின்ற
பொற்றடந்தனக்கிணையெனவிளங்குமோர்பொய்கை.

(இ-ள்.) நல்ல தவசிகளுக்கிருப்பிடமாகிய அம்மயிலையினிடத்து வாசனையுந் தேனும் பொருந்திய ஆம்பலும் நீலோற்பலமும் தாமரையும் நெருங்கி, வெற்றியையுடைய திருமாலெழுந்தருளியிருக்கும் திருக்கச்சிக்குக் கிழக்கில், முன்பு சொன்ன பொற்றாமரைத் தடாகத்துக்குச் சமானமாக விளங்கிக்கொண்டிருக்கும் ஒரு திருக்குளம். (எ-று.) (௧௯)

[பேயாழ்வார் திருவவதாரம்.]

௨0. நாம்பரனபதம்பரவிலார்க்குதவுவாணறவார்
ஆம்பல்வாயடைந்தக்கடத்தைப்பசிச்சதயம்
மேம்படும்படிமதலையாய்க்கேட்டுளோர்வெருவித்
தேம்பவேயழுதலுமதுகேட்டனன்றிருமால்

(இ-ள்.) எம்பெருமானுடைய திருவடிகளை வணங்காதவர்களுக்கு அச்சத்தைக்கொடுக்கும் ஸ்ரீநந்தகாழ்வான், அத்தடாகத்தில் தேன் நிறைந்த ஓர் செவ்வல்லி மலரினிடத்தடைந்து, ஐப்பசிமாதத்துச் சதயநக்ஷத்திரம் மேன்மையடையும்படி ஒரு குழந்தை வடிவங்கொண்டு, கேட்டவர்கள் பயந்து தேம்பும்படி அழுதவளவிலே அதைக் கேட்டருளினவனான எம்பெருமான், (எ-று.) (௨0)

நாம்-அச்சப்பொருளுணர்த்தும் உரிச்சொல். "பேநாமுருமென வரூஉங்கிளவி யாமுறைமூன்று மச்சப்பொருள" என்பது தொல்காப்பியம்.

[பேயாழ்வார் அருள்பெறுவது.]

௨௧. தண்டடத்தடைந்தலர்மிசைமகவினைத்தழுவிக்
கொண்டலர்த்திருமடந்தைகைக்கொடுத்தலுங்கோதை
தொண்டர்வாழ்வுறத்திருமுலையளித்தனள்சுருதி
விண்டவாயினாற்பேயெனும்பெயருமால்விதித்தான்.

(இ-ள்.) குளிர்ந்த அத்தடாகத்தையடைந்து, அல்லிமலரினிடத்து ஆவிர்ப்பவித்திருக்குங் குழந்தையைத் தழுவிக்கொண்டு, புஷ்பத்தில் வீற்றிருக்கும் பெரியபிராட்டியாரது திருக்கைகளிற் கொடுத்தருளலும், அப்பிராட்டியார், தொண்டராகிய ஆழ்வார் வாழும்படி திருமுலையூட்டினர். எம்பெருமானும் வேதத்தைச் சொல்லியருளின திருவாயினாலே அக்குழந்தைக்குப் பேயார் என்னுந் திருநாமத்தைக் கொடுத்தருளினன். (எ-று.) (௨௧)

"பேயனேயொழிந்தே னெம்பிரானுக்கே" என்னும் அருளிச்செயலின்படி பகவத் விஷயத்தில் ஆதராதிசயமுடையவராதலால் இவர்க்கு இத்திருநாமம் நிருபகமாயிற்று.

௪௨. அருளினுற்றவக்குமரனுஞ்சதுமறையறியாப்
பொருளினைக்கதிதருதிருவடிமலர்புகழ்ந்தான்
இருளினைத்தெறுபரிதியிற்பரமதமெருக்கித்
தெருள்பெறுத்தவனியையெனவகன்றனன்றேவும்.

(இ-ள்.) பிராட்டி பெருமான்களின் திருவருளாலிருந்த அக்குழந்தையும் நான்கு வேதங்களுமறியாத பரம்பொருளான பெருமானது மோக்ஷத்தைத் தருந் திருவடித்தாமரைகளைப் புகழ்ந்தனர். இருளைப்போக்குஞ் சூரியனைப் போல இதரசமயங்களையழித்து, பூமியிலுள்ளவர்களைத் தெளிவடையும்படி செய்வாயாக என்றருளிச்செய்து தேவப்பிரானும் சென்றருளினன். (எ-று.)

[ஆழ்வார்கள் மூவரும் சந்தித்தல்.]

௪௩. அய்யனேயெபின்னரவ்வணிநகர்க்கயலாந்
செய்யவான்பொழில்புடைபயிறிருவலிக்கேணித்
துய்யஞானத்தின்கொழுந்தினைச்சுருதிநாயகனைப்
பையராவணைத்துயில்பரந்தாமனைப்பணிந்தான்.

(இ-ள்.) எம்பெருமான் எழுந்தருளினபிறகு, (பேயாழ்வார்) அவ்வழகிய திருமயிலைக்குச் சமீபமான, செம்மையாகிய உயர்ந்த சோலைகள் பக்கங்களிற் சூழப்பெற்ற திருவல்லிக்கேணியி லெழுந்தருளியிருக்கும் பரிசுத்தமாகிய ஞானத்தின் கொழுந்தை, வேதங்களுக்குப் பிரதான நாயகனை, படத்தையுடைய சேஷசயனத்தில் அறிதுயிலமரும் பரந்தாமனைப் பணிந்தனர். (எ-று.) (௪௩)

௪௪. அங்குநின்றுமாலமர்திருப்பதியுளவனைத்தும்
பொங்குமன்பினோடோர்தினம்பரவியேபூதன்
தங்குதென்கடன்மல்லைவந்தவனெதிர்தழுவ
மங்குறும்பொழிற்கச்சியிலிருவரும்வந்தார்.

(இ-ள்.) (அப்பால்) அங்கு நின்றும் புறப்பட்டு, எம்பெருமானெழுந்தருளியிருக்கும் திருப்பதிகளாயுள்ளவைகளை யெல்லாம் மிக்க பக்தியோடு ஒவ்வொருதினமாக வணங்கிக்கொண்டு, பூதத்தாழ்வார் எழுந்தருளியிருக்கும் அழகிய திருக்கடன்மல்லைக்கு எழுந்தருளி, (அங்கு) பூதத்தாழ்வார் எதிர்கொண்டுவந்து தழுவிக்கொள்ளவே, அவ்விருவருங்கூடி மேகங்கள் தங்குஞ் சோலைகள் சூழ்ந்த திருக்கச்சிநகருக்கு எழுந்தருளினார்கள். (எ-று.)

௪௫. அவணுறைந்தருள்பொய்கைதாள்பரவினரவனும்
உவகையோங்குறத்தழுவினனிருவரையொருநாட்
சிவணியங்கருளாளனைப்பணிந்துகீட்டிசையிற்
கவனவெம்பரியினனெழப்பாலியைக்கடந்தார்.

(இ-ள்.) (வந்த ஆழ்வார்களிருவரும்) அங்கு எழுந்தருளியிருக்கும் பொய்கையாழ்வார் திருவடிகளை வணங்கினார்கள்: அவரும் ஆனந்தம் அதிகரிக்க அவ்விருவரையுந் தழுவினர். ஒருநாள் மூவருங்கூடி அங்கு எழுந்தருளியிருக்கும் பேருளாளப் பெருமானைப்பணிந்து, நடைவேக முள்ள குதிரைகளையுடைய சூரியன் கிழக்குத்திக்கில் உதிக்குமளவிலே பாலாற்றைக் கடந்தார்கள். (எ-று.) (௪௫)



[திருக்கோவலூரையடைதல்.]

௪௬. துறந்தவாவினையெவைகளுந்தமிழிடைச்சுருதி
பிறந்தவாயினர்நடந்துலகளந்தருள்பெரியோன்
சிறந்தவன்மாகாரணனுறைதலாற்றிகழ்ந்தே
அறந்தவாதுயர்கோவலாமணிநகர்கண்டார்.

(இ-ள்.) (பிரகிருதி சம்பந்தமான) ஆசையும் வினைகளுமான எல்லாவற்றையும் விட்டு, வேதார்த்தங்கள் தமிழில் உதயமான திருவாக்கினையுடைய ஆழ்வார்கள் மூவரும் நடந்து, உலகங்களையளந்தருளின பெரியோனும் சிறப்பையுடைய ஆயனும், திருமகள் நாயகனுமாகிய நாராயணன் நித்யவாசஞ் செய்வதனாலே விளங்கி, தருமங்கள் கெடாமல் உயரும் திருக்கோவலூராகிய அழகிய நகரத்தைத் தரிசித்தார்கள். (எ-று.) (௪௬)

ஆயன்-என்பது திருக்கோவலூ ரெம்பெருமானுக் கொரு திருநாமம்.

௪௭. எத்திறக்கடவுட்பதமிருந்தனவெனினும்
முத்திவீடுவிண்பதத்தலதிலையெனுமுறைபோற்
சித்திரப்பணிக்கோபுரச்சிகரமீச்செறிபொற்
கத்திகைக்கொடிககனமீத்துயல்வரல்கண்டார்.

(இ-ள்.) சித்திரத்தொழிலமைந்த கோபுர சிகரத்தின்மீது பொருந்திய பொன்மயமான துகிற்கொடிகளானவை, எவ்விதமான தேவர்களது பதவிகளிருந்தனவாயினும், மோக்ஷமென்பது விஷ்ணுவின் பரமபதத்திலல்லது (அப்பதவிகளில்) இல்லை யென்றுரைக்கும் விதம்போல, ஆகாயத்தின்மீது அலைவதைக்கண்டார்கள். (எ-று.) (௪௭)

௪௮. பண்களிற்சிறையளியினமுரன்றிசைபரப்பி
உண்களிக்கிவர்ந்துறைமலர்ப்பணைபலவொருவி
எண்களிற்றிலுக்கருள்புருடனைக்கண்டவிழியில்
மண்களிற்புவியுறைக்கருள்பெண்ணையுங்கண்டார்.

(இ-ள்.) சிறகுகளையுடைய வண்டுக்கூட்டங்கள் இசைப்பாட்டைப் போல ஒலிசெய்து இசையைவிரித்து உண்ணும் தேனுக்காக வதியிருக்கும் மலர்களையுடைய மருதநிலங்கள் பலவற்றையுங் கடந்து, தன்னைச் சிந்தித்த கபிலமகாமுனிக்குத் திருவருள்புரிந்த பரமபுருஷனைச் சேவிக்கத் தகும்படி தங்கள் திருக்கண்களாலே, பூமியினிடத்திலுள்ளோர்க்கும் (பலவளங்களையும்) கொடுக்கும் பெண்ணையாற்றையுங் கண்டார்கள். (எ-று.) (௪௮)

௪௯. நெடியவாயனையாதியோகியரிவணேதர
அடிகொள்பாவின்ஞானச்சுடரேற்றுவரதனாற்
படியில்யாவருமிலங்குவர்பாதகவிருணீ
கடிதுபோகெனல்போற்றுயன்மதிற்கொடிகண்டார்.

(இ-ள்.) நிலங்கடந்த நெடுமுடியண்ணலான திரிவிக்கிரமமூர்த்தியை ஆதியோகியர்கள் இவ்விடத்தே சந்தித்து, அப்பெருமானது திருவடிகள் ஏற்றுக்கொள்ளும் பாட்டுக்களாலே ஞானதீபமேற்றுவார்கள்: (அதனாலே) பூமியிலுள்ள யாவரும் விளங்குவார்கள்; (ஆகையால்) பாதகமான இருளே! நீ விரைந்து போய்விடுவாயாக என்று சொல்லுவதுபோல மதில்களின் மேல் ஆடுங் கொடிகளைப் பார்த்தார்கள். (எ-று.) (௪௯)

௨0. நாமமெண்ணருஞ்செய்யகட்கரியமானறைப்பூந்
தாமவண்டுழாய்தனைநகரமுந்தரித்தருபோன்
மாமராமகிழ்பூகசஞ்செண்பகம்வருக்கை
காமர்தங்குபைம்பொழில்புடைப்பில்வனகண்டார்.

(இ-ள்.) எண்ணுதற்கரிய திருநாமங்களும் சிவந்த திருக்கண்களுமு டைய கரியதிருமேனியனை எம்பெருமானது தேன்பொருந்திய அழகிய வளப்பத்தைக் கொண்ட திருத்துழாய் மாலையை அத்திருக்கோவலூரும் அணிந்ததுபோலே, மாவும் வெண்கடம்பும் மகிழமரமும் கமுகும் சண்பக மும் பலாவும் அழகாகத்தங்கிய பசுமையான சோலைகள் புடைசூழ்ந்திருப் பனவற்றைப் பார்த்தார்கள். (எ-று.) (௨0)

௨௧. அவர்களங்குவந்தணுகுமுன்கோவல்வாழரிக்கின்
றிவரிடுந்தமிழ்ஞானதீபத்தினுக்கிணையாக்
குவலயந்தனைவிளககலேமென்னவுட்கொள்ளாக்
கவனவெம்பரியிரதவான்சுடர்கடல்கரந்தான்.

(இ-ள்.) ஆழ்வார்கள் மூவரும் அங்கு வந்து அடைவதற்கு முன்னே அத்திருக்கோவலூரில் நித்யவாசஞ்செய்யும் பெருமானுக்கு இன்று இவர் கள் ஏற்றும் தமிழாகிய ஞானதீபத்துக்குச் சமானமாகப் பூமியை விளங்கச் செய்யமாட்டோமென்று மனத்திற்கொண்டு, நடைவேகமுள்ள குதிரைகள் பூண்ட இரதத்தையுடைய சூரியன் கடலிற்புகுந்தொளித்தான். (எ-று.) (௨௧)

௨௨. உருமுமின்னுமீப்பிறழும்வானகம்புதைத்துருக்
கருமுகிற்கணமிடைவிடாதுறைநனிகான்ற
அருமறைப்பொருள்கோவல்வாமனப்பதியாயன்
தருமளப்பருமாயையேபோற்பரந்ததுதமமே.

(இ-ள்.) கரிய மேகக்கூட்டங்களானவை இடியும் மின்னலுமாக மே லே விளங்கும் ஆகாயத்தை மறைத்து ஒலித்து சோனைபெய்தன. அரிய வேதத்திற்சொல்லும் (பிரதானப்) பொருளாகிய திருக்கோவலூ ராகிய வாமன க்ஷேத்திரத்திலெழுந்தருளிய ஆயனாகிய பெருமான் உண் டாக்கிய அளவிடுதற்கரிய மாயையைப்போல இருள் பரவியது. (எ-று.)

௨௩. மண்டலத்துடன்விண்டலம்வணங்குறுதிருமண்
புண்டரத்திருநுதல்வயிணவர்குழாம்பொதுளி
எண்டரற்கருமணியணிவீதிகளிகவா
அண்டர்தொக்கவப்பதியிடைகழியடைந்தார்.

(இ-ள்.) பூமியிலுள்ளோருடன் ஆகாயவாசிகளும் வணங்கும் திரு மண்புண்டரத்தைத் தரித்த அழகிய நெற்றியையுடைய ஸ்ரீவைஷ்ணவ சமூகங்கள் நெருங்கப்பெற்று, எண்ணுதற்கரிதாகிய மணிமயமான அழகிய திருவீதிகளைக்கடந்து நித்திய சூரிகள் கூடிய அத்திருப்பதியினிடத்து ஒரு இடைகழியை அடைந்தார்கள். (எ-று.) (௨௩)

இடைகழி-நடைத்திண்ணை.

௨௪. புக்கயோகியர்மூவருநான்மறைபுகழ
மைக்கவின்கொடுவாளராவணைத்துயின்மாயோன்



தக்கபார்விசும்பளந்ததாட்டகையினெத்தகையுங்
கைக்கூவேபுகழ்ந்தளவளாயுறைதருங்காலை.

(இ-ள்.) (அங்கு) பிரவேசித்த ஆதியோகியர் மூவரும், நான்கு வேதங் களுந் துதிக்கக் கரிய கோலத்தைக்கொண்டு ஒளிபொருந்திய சேஷசய னத்தில் அறிதுயிலமரும் மாயவனது பூமியையும் ஆகாயத்தையும் அளந் தருளித் தங்களுக் குரிமையான திருவடிப் பெருமையின் விசேஷத்தாலே, (வேறு) எந்தப்பெருமையும் தமக்குக்கைப்பனவாக, (அத்திருவடிகளையே) புகழ்ந்துகொண்டு நெஞ்சுகலந்து கூடியிருக்குங்காலத்தில். (எ-று.) (௨௪)

[பெருமான் எழுந்தருளல்.]

௨௫. கோவலாகியவாமனப்பதியுறைகொண்டல்
மூவர்செந்தமிழ்விரும்பியோர்முதியவேதியனாய்
நாவகத்துரைகுழறமெய்நடுக்குறநடந்தே
யாவரிங்குளீருண்டுகொலெமக்கிடமென்றான்.

(இ-ள்.) திருக்கோவலூராகிய வாமனப்பதியினிடத்து நித்தியவாச ஞ்செய்யும் மேகம்போன்ற பெருமான், ஆதியோகியர் மூவருடைய செம் மையான தமிழ்ப்பாசுரங்களை விரும்பி, ஒரு விருத்த வேதியனாய், நாவி னிடத்தில் சொற்கள் குழறவும், சரீரம் நடுங்கவும், நடந்துவந்து, இங்கி ருப்பவர்களே நீங்கள் யாவர்? எமக்கு (இங்கு இருக்க) இடமுண்டோ? என்றனன். (எ-று.) (௨௫)

௨௬. என்றுகூறுமாறனையமைத்திடனளித்திருத்தி
நின்றுமூவருமிடம்பெறார்நெருக்கவுநெடியோன்
நன்றுநீருறையிடைகழிநால்வருமிருத்தற்
கொன்றுறாதிடமெனநகைத்தின்னணமுரைப்பான்.

(இ-ள்.) என்று சொல்லும் பெருமானையமைத்து இடங்கொடுத் திருத்தி, ஆழ்வார்கள் மூவரும் நின்றுகொண்டு இடம் போதாமல் நெருக்க மடையவே, நெடியவனான பெருமான், நீங்களிருக்கு மிடைகழி நன்றாயிரு ந்தது! நாம் நால்வரும் இருக்க இதில் இடம் பற்றாது, என்று சொல்லி நகைத்து (மேலும்) இவ்விதமாகச் சொல்லுவானாயினன். (எ-று.) (௨௬)

௨௭. நால்வருக்கிடந்தருவதன்றிடைகழிநனிகார்
கால்வதப்பெயலொழிவதன்றிருள்புலர்காறும்
மால்வளத்திருவடியெளிதினிற்கண்டுவணங்க
நூல்வருக்கலாந்தீபமுண்டேலெனநுவன்றான்.

(இ-ள்.) இவ்விடைகழி, நால்வருக்கு மிடங்கொடுப்பதன்று; மேகங் கள் மிகப்பெய்வதான அந்த மழையும் ஒழிவதன்று; தீபமுண்டாயின் இருளொழியும் வரையில் எம்பெருமானது வளமான திருவடியை எளிதில் சேவித்து வணங்க நூல் செய்யலாம் என்று சொல்லியருளினன். (எ-று.

௨௮. உரைத்தவம்மொழிசெவியுறததமதுளமுருகா
நிரைத்தமெய்ம்மயிர்சிலிர்த்தெழவானந்தநிகழத்
திரைத்தடங்கடற்புயல்கொலென்றயிர்த்தனர்தெரியா
வரைத்தஞானதீபத்திறற்காண்பதுமதியா.

(இ-ள்.) சொல்லிய அம்மொழி தங்கள் செவியிற் புகுதலும், உள்ளமுருகி வரிசையாயுள்ள மெய்ம்மயிர் சிலிர்த்தெழவும் ஆனந்தம் உண்டாகவும், (இவர்) திரைகளையுடைய விசாலமான கடலிற்றுயிலும் மேகம் போன்ற பெருமானே என்று சந்தேகித்து, (அவ்வுண்மை) யறியத் (தாம்) கொண்ட ஞானதீபத்தாலே காண நினைத்து, (எ-று.) (௫௮)

[அருளிச்செயல்.]

௫௯. வையந்தகளியாவார்கடலேநெய்யாக
வெய்யகதிரோன்விளக்காவெனத்தொடங்கி
ஐயனருட்பொய்கைதிருவந்தாதியோதுதலுந்
துய்யதிருஞானச்சுடரொன்றுதோன்றியதால்.

(இ-ள்.) "வையந்தகளியா வார்கடலேநெய்யாக, வெய்யகதிரோன் விளக்காக" என்று தொடங்கி, பகவானது அருள்வடிவான பொய்கையாழ்வார், (முதல்) திருவந்தாதியை யருளிச்செய்ய, பரிசுத்தமான அழகிய ஞானதீபமொன்று தோன்றியது. (எ-று.) (௫௯)

‡ அந்தநூறுவெண்பாவென் றறையுந்திருவந்தாதிதனின்
முந்துபதிபாற்கடலரங்க முதிர்வேங்கடம்பொன்றிருவெஃகா
விந்தையுறையுந்திருக்கோவ லூர்நல்வளஞ்சேர்விண்ணகரம்
இந்தவாறுதிருப்பதியும் பொருந்திச்சிறந்தவிசைபெறவே.

இச்செய்யுள் செய்யுட் குருபரம்பரை யொன்றிற் கண்டது.

௬0. அன்பேதகளியாவார்வமேநெய்யென்று
முன்பேதொடங்கிமொழிதிருவந்தாதியால்
இன்பேறுசெஞ்சொலியற்பூதப்பேரிறையும்
மன்பேரொளிவிளக்கமாயனுக்கொன்றேற்றினன்.

(இ-ள்.) பொருள்நயம் மேன்மேலுறும் செவ்விய சொல்வளம்பொருந்திய பூதத்தாழ்வாரென்னுந் திருநாமமுடைய உயர்ந்தோர், "அன்பேதகளியா ஆர்வமேநெய்யாக" என்று ஆதியாகத்தொடங்கி அருளிச்செய்த (இரண்டாந்) திருவந்தாதியால், நிலைபெற்ற பேரொளிவீசும் தீபமொன்றை மாயப்பிரானுக் கேற்றினர். (எ-று.) (௬0)

‡ வடவேங்கடந்தென்னரங்கமுநீர் மலைபாடகமாலிருஞ்சோலை
இடவெந்தைபாற்கடல்பேரை யெழிலார்கோவலூர்தஞ்சை
கடன்மல்லைசிரத்திநகர் கோட்டிநகர்தண்காலூருங்
குடந்தையீரேழுடனென்றவ் வந்தாதியினுட்கூறியதே.

இச்செய்யுள் செய்யுட் குருபரம்பரை யொன்றிற் கண்டது.

௬௧. ஞானவிளக்கோரிரண்டுநண்ணுதலுமானளினக்
கானமொளிர்செங்கதிரைக்கண்டலர்ந்தபான்மையைப்போற்
றூநதிசேர்தாள்கரங்கண்சோதிவதனந்துலங்க
வானவனியன்றளந்தமாலுருவங்காட்டிநின்றான்.

(இ-ள்.) (இப்படி) ஞானதீபங்களிரண்டுந் தோன்றினவளவிலே, பிரகாசிக்குஞ் சூரியனைக்கண்டு தாமரைக்காடு மலர்ந்த தன்மையைப்போல, பரிசுத்தமான கங்காநதிபொருந்திய திருவடியும் திருக்கையும் திருக்கண்ணும் சோதியான திருமுகமண்டலமும் விளங்க, எம்பெருமான், அக்காலத்தில் ஆகாயத்தையும் பூமியையும் அளவிட்ட திரிவிக்கிரம வுருவத்தைக் காட்டி நின்றனன். (எ-று.) (௬௧)



௬௨. திருக்கண்டேன்பொன்மேனிகண்டேன்றிகழும்
அருக்கனணிநிறமுங்கண்டேன்சங்காழி
உருக்கண்டேன்காண்பதினியோர்பொருளின்றென்னப்
பொருட்கண்டவந்தாதியாற்பேயும்போற்றினன்.

(இ-ள்.) (அப்போது) "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும் அருக்க னணிநிறமுங் கண்டேன்" சங்காழியுருக்கண்டேன் இனிக் காண்பதொரு பொருளில்லையென்று, வேதார்த்தங்களையுடைய (மூன்றாந்) திருவந்தாதியால் பேயாழ்வாருந் துதித்தனர். (எ-று.) (௬௨)

‡ அவ்வந்தாதிதனிற்பதினைந் தூர்பாற்கடல்வேங்கடமரங்கம்
ஒவ்வுங்குடந்தையிடவெந்தை கோட்டியூர்வேளுக்கையுடன்
செவ்வெஃகாவைகுந்தமட்ட புயம்விண்ணகர்சீரலிக்கேணி
கவ்விவிசும்பார்சோலைமலை கடிகைகச்சிப்பாடகமே.

இச்செய்யுள் செய்யுட் குருபரம்பரை யொன்றிற் கண்டது.

[எம்பெருமான் அருளப்பாடும் ஆழ்வார்கள் வேண்டுகோளும்.]

௬௩. தந்தைபுரிந்ததவமதனைச்சங்கரன்போற்
றெந்தையுருமூவருங்கண்டின்பமுடனென்புருகி
முந்தைமறையினடிக்கேமுடிசூட்டச்
சிந்தைகளிகூர்ந்து செங்கட்டிருமாலும்

(இ-ள்.) சங்கரன் போற்றும் எந்தையாய்ப் பிரமதேவன் செய்த தவப்பேறான எம்பெருமானது திருவுருவை ஆழ்வார்கள் மூவருந் தரிசித்து, அகமகிழ்ச்சியோடு என்புமுருகி, முதன்மைபெற்ற வேதங்களுங்காணாத அவன் திருவடிகளில் தங்கள் முடியைச்சூட்டினாராக, வாற்சல்லியத்தினாலே சிவந்த திருக்கண்களையுடைய திருமாலும், திருவுள்ளத்திற் சந்தோஷமடைந்து, (எ-று.) (௬௩)

வாற்சல்லியமென்பது கன்றினிடத்துப் பசுவுக்கிருக்கும் அன்பு. வற்சம்-கன்று.

௬௪. நீவிர்புகன்றநிகரிறிருவந்தாதிப்
பாவில்வழுவாதெவரேனும்பன்னிடினுந்
தாவினமதுசரண்பெறுவர்சாற்றிலெம
தாவியவரேயருள்வரங்கள்யாவென்றான்.

(இ-ள்.) நீங்கள் சொல்லிய ஒப்பில்லாத அழகிய அந்தாதிப்பாக்களில் எவரேனும் வழுவுறால் தேர்வாராயினும், (அவர்) கெடுதலில்லாத நமது பதத்தையடைவர்; சொல்லுமிடத்து அவரே எமது உயிரும் ஆவர். (இனி) உங்களுக்கு நான் கொடுக்கும் வரங்கள் யாவை என்றான். (எ-று.) (௬௪)

வேறு.

௬௫. அருமறைப்பொருணீ யெளிதுவந்தெமையின் டாண்டடியளித்தனையிதனிற், றருவரமயலின் றுளகொலோவெனினுஞ் சகமெலாமெங்கள்பாற் றனிவந், திருளிடைகழிக்கட் காட்டுமிக் கோல மிருகணுற்கண்டடியிறைஞ்சப், பொருவருமபரம பதமளித்தியென வளித்தனனருட்கரும்புயலும்.

(இ-ள்.) அரிய வேதப்பொருளாகிய தேவரீர் எளிதில் வந்து இங்கு எங்களை அடிமைகொண்டு திருவடிகளைக் கொடுத்தருளினீர். (இனி எங்களுக்கு) இன்று இதைக்காட்டிலுங் கொடுக்கக்கூடிய வரம் வேறுண்டோ? என்றாலும் இருட்டில் இடைகழியில் எங்களிடத்துக்குத் தனியாக வந்து காட்டிய இத்திருக்கோலத்தை உலகிலுள்ளோர் யாவரும் இருகண்களாற் சேவித்துத் திருவடிவணங்க (அவர்களுக்கு) ஒப்பில்லாத பரமபதத்தைத் தந்தருள்வீராக என்று விண்ணப்பிக்க, அருளோடுகூடிய கரியமேகம் போன்ற பெருமானும் (அவ்வரத்தைக்) கொடுத்தருளினன். (எ-று.) (௬௫)

௬௬. வேதமுங்காண்டற் கரியவாயலர்மேல் விரிஞ்சனேமுதலினோர்விரும்பும், பாதபங்கயமூ வருமுடிதழுவப் பணிந்தனர்பகர்ந்தவப்பரிசே, ஓதநீருலகத் தவர்புகழ்விளங்க வுவந்தவராருச்சனை புலவா, நாதனுங்கோவற் பதிவயினிறைந்தான் பத்திசாரன்புகழ் நவில்வாம்.

(இ-ள்.) வேதங்களுங் காண்பதற்கரியனவாகி, தாமரைமலரின்மீதிருக்கும் பிரமன் முதலாயினோர் விரும்பும் (எம்பெருமானது) பாததாமரைகளில் ஆழ்வார்கள் மூவரும் தங்கள் முடிதழுவப் பணிந்தனர். முன் சொல்லிய அவ்விதமே, திரைகளையுடைய கடல் சூழ்ந்த உலகத்தில் ஆழ்வார்கள் புகழ் விளங்கும்படி, ஆச்ரிதர் விரும்பிய அர்ச்சாரூபமாகுதல் கெடாத எம்பெருமானும் திருக்கோவலூரி லெழுந்தருளினன். இனி பக்திஸாரரான திருமழிசையாழ்வாருடைய வைபவத்தை உரைப்போம். (எ-று.) (௬௬)

"தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானே, தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்" என்னு மருளிச்செயலின்படி, அர்ச்சாவதாரம், ஆச்ரிதரிட்டவழக்காயிருத்தலால், 'உவந்தவராருச்சனை' என்றார்.

---

[இம்முதலாழ்வார்கள் மூவரும் திருவவதாரஞ் செய்தது முதல் திருக்கோவலூரில் எம்பெருமானைச் சேவித்தது வரையில் உள்ள வைபவம், இதுகாறும் எமக்குக் கிடைக்கலான வேறு செய்யுட் குருபரம்பரைகளிலும் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலிய பல கிரந்தங்களிலும் வழங்குமாறு:—

உலகத்தார் பிறக்கும் வழியாக வன்றியே, அயோநிஜராய் அப்பிராக்ருதராய்ப் புஷ்பங்களிடத்தே பிறந்தவர்களான இந்தயோகிகள் மூவரும், எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தால் இராஜஸ தாமஸ ஸத்வமென்னும் முக்குணங்களில் முற்கூறிய இரண்டையும் நீக்கிப் பிற்கூறிய ஸத்வமாகிற ஒன்றினில் ஒன்றி நின்று, ஞானபக்தி வைராக்கியங்களையுடையவர்களாய், அன்னபானாதிகளை ஒழித்தவர்களாய், ஜகஜ்ஜந்மாதிகாரணபூதனான ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் மெய்யன்புடையவர்களாய் வாழ்ந்திருக்குங்காலையில், இல்லறத்தாருடைய உறவு தங்களுக்குப் பொருந்தாமையால், இவர்கள், ஒருநாளிருந்த இடத்தில் மறுநாள் இராதே, தம்மோடொத்த பரம சாத்விகர்களைத் தேடித் தரிசிக்கத் திருவுள்ளங்கொண்டு, திவ்ய க்ஷேத்திரங்கள் தோறும் சஞ்சரித்து வந்தனர்கள். இவர்கள், ஒருவரை யொருவர் அறியாமல், தனித்தனியே சஞ்சரித்து வருங்கால், ஸர்வேச்வரனும், தனக்கு ஆத்மபூதரான இவர்களைக்கொண்டு உலகத்தை உய்விக்கத் திருவுள்ளங் கொண்டிருப்பவனாகையால், இம்மூவரும் ஒருவரையொருவர் அறியாமல் பெண்ணையாற்றின் தென்கரையில் வாமன க்ஷேத்திரமாகிய திருக்கோவலூரில் வந்து தன்னைச் சேவிக்கும்படி, இவர்களுக்குப் புத்திப்பிரதானம் பண்ணினன். இவர்களும் அவ்வாறே அத்திருப்பதியை யடைந்தனர்கள்; பகற்பொழுதும் போயிற்று.

ஸூரியன் அஸ்தமனமான பொழுது, முதல்முதல் பொய்கையாழ்வார் ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய திருமாளிகையிற் சென்று, அம்மாளிகையின் இடைகழியின் மீது சயனித்திருந்தனர். பின்னர் பூதத்தாழ்வார் கண்வளர்தற்கு இடந்தேடிக்கொண்டு சென்று, பொய்கையாழ்வார் பள்ளிகொண்டிருக்கும் இடத்தையடைந்து, 'அடியேன் சயனித்தற்கு இத்திருமாளிகையிற் சற்று இடங்கிடைக்குமோ?' என்று வினவினர். பொய்கையாழ்வார் அது கேட்டு, 'சுவாமீ! இங்கே இவ்விடைகழியில் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்: தேவரீர் எழுந்தருளினால் இருவரும் இருக்கலாகும்' என விண்ணப்பஞ் செய்தனர். அங்ஙனமே அவ்விருவரும் அங்கு இருந்து ஒருவரை யொருவர் உசாவிக்கொண்டிருக்கும் போது, பேயாழ்வாரும் அவ்வாறே இடந்தேடிக்கொண்டு அந்தத் திருமாளிகைக்கு வந்து 'சயனித்தற்கு இங்கே இடங்கிடைக்குமா?' என்று கேட்க, முன்னைய ஆழ்வார்களிருவரும், 'சுவாமீ இவ்விடம் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்' எனக் கூறினார்கள். கூறவே, இவரும் உள்ளுறச் சென்று, மூவருமாக நின்றுகொண்டு அளவளாவி யிருந்தனர்.

அவ்வளவிலே திருக்கோவலூர் எம்பெருமானும், பேரிருளும் பெருமழையும் உண்டாக்கித், தானும் அவ்விடைகழியிற் சென்று, அவர்களுக்கு அதிகநெருக்கம் உண்டாகும்படி செய்தருளினன். ஆழ்வார்கள் மூவரும், 'முன்னில்லாத நெருக்கம் இப்பொழுது உண்டான காரணமென்னை? நம்மை யொழியவும் இவ்விடைகழியைப் பற்றிநிற்பார்கள் உண்டோ?' என்று, "ஞானச்சுடர் விளக்கேற்றியும்" "உணர்வெனும் ஒளிகொள் விளக்கேற்றியும்" "வெய்யகதிரோன் விளக்கேற்றியும்" பார்த்தனர். ஸ்ரீமந் நாராயணனுடைய மைப்படி மேனியையும் செந்தாமரைக் கண்ணையும் நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டநுபவித்து, அந்த அநுபவத்தாலுண்டாகிய அன்பின் மிகுதியாலே, பொய்கையாழ்வார், பிறப்பிறப்பென்னும் பெரும்பிணிக்குப் பரமௌஷதமும் சமுசாரசாகரத்தைக் கடக்கலாவதான தெப்பமுமாய், எம்பெருமானுடைய திவ்யகுணாநுபவ ரூபமாய், "வையந்தகளியா" என்று தொடங்கி ருக்வேத சாரமான முதற்றிருவந்தாதியும், பூதத்தாழ்வார் பரமபத சோபானமே என்னலாவதாய் "அன்பேதகளியா" என்று ஆரம்பித்து எஜுர்வேத சாராமிசமான இரண்டாந் திருவந்தாதியும், பேயாழ்வார் பக்திரசம் ஒழுகுவதாய் எம்பெருமானுடைய ரூபகுணசக்திகளைப் பிரதிபாதிப்பதாய் "திருக்கண்டேன்" என்றெடுத்து சாமவேதசாரமான மூன்றாந் திருவந்தாதியும் ஆகிற திவ்வியப்பிரபந்தங்களைச், சேதனர் உய்ந்துபோமாறு, ஞானத்தமிழாக அருளிச்செய்து உலகத்தை வாழ்வித்தருளினார்கள்.]

---

[இனி, முதலாழ்வார்கள் வைபவத்தொடர்ச்சியாய் அடியில் வருகின்ற ருக - செய்யுளும், வேறொரு செய்யுட்குருபாம்பனாயிற் கண்டது.]

[திருவயோத்தியில் சக்ரவர்த்தித்திருமகனைச் சேவித்தல்.]

* ஆதியாய்நடுவுமாகியந்தமாமனந்தன்றன்னால்
வேதமோதிடுநியாசவித்ந்தெரிபொய்கையாரும்
ஓதுநற்பதிபன்னிக்குள்ளுற்றசம்பந்தந்தன்னே
டேதமில்பிரமவித்தையெய்தியபூதத்தாரும்

(இ-ள்.) வேதத்திற் பிரதிபாதிக்கும் நியாசவித்தையை எப்பொருளுக்குந் தானே காரணபூதனாய் இடையில் ரக்ஷிப்பவனாய் எல்லாம் இறுதியுற்ற காலத்தில் முடிவில் நிற்பவனாய் அனந்தனென எம்பெருமானால் தெரிந்துகொண்ட பொய்கையாழ்வாரும், நூல்களிற் சொல்லப்பட்ட நல்ல புருஷ ஸ்திரீகளுக்குள்ள (பர்த்ருபார்யா) சம்பந்தத்தோடு குற்றமற்ற பிரமவித்தையைப் பெற்ற பூதத்தாழ்வாரும், (எ-று.)

கர்மாதிகளான உபாயாந்தரங்களைவிட்டு எம்பெருமானையே ரக்ஷகனாகப்பற்றுதல் நியாசவித்தையாம். இது பிரமவித்தை, சரணாகதி வித்தை என்பது முதலிய பரியாயநாமங்களாலும் வழங்கும். ௧

* ஒப்பறுபிரமவித்தையோடுமுத்தத்துவத்தின்
தப்பறுஞானந்தானுஞ்சாற்றுயிர்க்குடலுக்குள்ள
செப்பமார்நட்பும்பெற்றதிகழ்புகழ்ப்பேயாழ்வாரும்
மெய்ப்பொருளுரைக்குமூன்றுவேதம்போலொன்றுகூடி.

(இ-ள்.) ஒப்பற்ற பிரமவித்தையோடு தத்துவத்திரயங்களின் தவறுதலில்லாத ஞானமும்-சொல்லப்படும் செவ்வையான உடலுக்கும் உயிருக்குமுள்ள (சரீரசரீரி) சம்பந்தமும் பெற்று, விளங்குங் கீர்த்தியையுடைய பேயாழ்வாரும், தத்துவார்த்தங்களைக் கூறும் மூன்று வேதங்கள் போல, ஒன்று கூடி. (எ-று.)

தத்துவத்திரயம்: சித்து, அசித்து, ஈச்வரன் என்பன. மூன்றுவேதங்கள்: ருக்கு, யஜுசு, சாமம் என்பன. தனித்தனிப் பெயரெய்திய இவை ஒன்று கூடியிருப்பதனால் 'த்ரயீ' எனப்படும். ௨

* ஏதமின்மோக்கமீயுமேற்றமார்ந்திட்டதாகிக்
கோதறுஞானமிக்கோர்கூறுசால்புற்றதாகிப்
போதனேமுதலோராயபுலவரைப்புரப்பாளங்கள்
ஆதிநாயகன்வந்துற்றவயோத்திசென்றடைந்திட்டாரால்.

(இ-ள்.) தோஷமில்லாத மோக்ஷத்தைக் கொடுக்கும் வைபவமுடையதாய், குற்றமற்ற ஞானத்தால் உயர்ந்தவர்கள் சொல்லும் பெருமையுற்றதாய், பிரமதேவன் முதலோரான தேவர்களைக் காக்கும்வண்ணம் நமது ஆதிநாயகன் இராமபிரானாகவந்து திருவவதாரஞ் செய்ததான திருவயோத்தியைச் சென்று சேர்ந்தார்கள். (எ-று.)

ஏற்றமார்ந்திட்டதாகி சால்புற்றதாகி நாயகன் வந்துற்ற அயோத்தியென்க. இவை மூன்று பாட்டும் ஒரு தொடராதலால், பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் ஒன்று கூடி அயோத்திசென்றடைந்திட்டாரென்க. ௩



* ஆங்குசெம்மலையுமையனணிகெழுமார்புமூரும்
நீங்கிமிக்கருளிளேடுங்கிசரிலங்கையெய்தி
ஏங்கிடும்மரர்மாதரிடுக்கண்டீர்த்தருளுஞ்செய்ய
மாங்குயிலனையாளோடும்வாங்குவிற்றடக்கையேந்தி

* நின்றிடுமிளங்கோவேர்டுங்கிகழ்த்துதம்பியர்தம்மோடும்
நன்றியஞ்சனையார்பெற்றஞானமூர்த்தியினோடோங்கித்
துன்றியமரகதம்போர்ச்சுடரொளிபரப்பிமேவும்
வென்றிசால்பெருமான்ருளின்மேவியேவணங்கிநின்று

* தரியலர்தங்கட்கேறேதாபதர்தவத்தின்பேறே
விரியுமெய்க்கவசக்கோவேவேதமேத்திடுதேவேயென்
றரியவன்றேன்சீராகுமம்புதிதன்னிலாழ்ந்து
தெரிவருங்களிப்பிளேடுந்திகழ்ந்தவணிருக்குநாளின்

(இ-ள்.) செந்தாமரையையும் எம்பெருமானது அழகு மிகுந்த திருமார்பையும் திருவயோத்தி நகரத்தையும் விட்டு நீங்கி, அரக்கர்வாழும் இலங்கையையடைந்து, ஏக்கமடைந்த தெய்வப் பெண்களுடைய துன்பத்தை மிகுந்த கிருபையோடு தீர்த்தருளிய செவ்விதான மாங்குயில்போன்ற சீதாபிராட்டியாரோடும், வளைக்கும் கோதண்டத்தைத் திருக்கையிலேந்தி (அருகே) நின்றுகொண்டிருக்கும் இளையபெருமாளுடனும், (அவரோரொத்தவர்கள்) என்று சொல்லப்படும் பரதசத்ருக்கனரென்னும் தம்பியர்களோடும், நன்மையைத்தரும் அஞ்சனாதேவியார் பெற்ற ஞானமூர்த்தியாகிய ஆஞ்சநேயரோடும், உயர்வடைந்திருந்த மரகதமணியைப்போல மிக்க ஒளியை விரித்துக்கொண்டு அங்கே எழுந்தருளியிருக்கும் வெற்றி மிகுந்த ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திருவடியையடைந்து வணங்கிநின்று, பகைவராகிய (யானைக்கு) ஆண்சிங்கமே! தவசிகளது தவத்தின் பிரயோசனமே! விரிவுடைய சத்தியமென்னும் கவசத்தை யணிந்த தலைவனே! வேதங்கள் துதிக்கும் பரதெய்வமே! என்று துதித்து, அப்பெருமானது அரிய கலியாணகுணங்களாகிய சமுத்திரத்தில் ஆழங்காற்பட்டு, இவ்வளவென்றறிதற்கரிய சந்தோஷத்துடன் விளங்கி அங்கு இருக்கும்போது (எ-று.)

[வேதியரொருவர்க் கருள்புரிதல்.]

* வறுமையாங்கொடியதீயின்வாடுமோர்மறையோனெய்தி
உறுவராமூவர்தாளினுறலுமாங்கவனுக்கிம்மைப்
பெறுபொருண்முழுதுமோக்கப்பேறுமீந்தருளிப்பின்னர்
தெறுவினையுடையார்கூடிச்சேர்ந்தனர்வதரிமாதோ.

(இ-ள்.) தரித்திரமென்னும் கொடிய தீயினால் வாடும் ஒரு பிராமணர் வந்து தவசிகளாகிய ஆழ்வார் மூவர் திருவடிகளையுமடைதலும், அவருக்கு இவ்வுலகத்தில் அடையக்கூடிய எல்லாப் பொருள்களையும் மோக்ஷலாபத்தையும், கொடுத்தருளி, அதன்பிறகு, பாபங்களைக் கெடுத்த மூவருங்கூடி வதரியாச்சிரமத்தை யடைந்தார்கள். (எ-று.) ௭

[வதரியாச்சிரமத்தையடைந்து யோகத்திருத்தல்.]

* நாரணனாரணனுமென்னநண்ணிடுமுனிவர்தம்மைக்
கரணெடுவாக்குந்தூயகருத்துமொன்றாகவேத்தித்
திரனுறுமலையினோர்சார்திகழ்தருங்குகைக்குட்சென்று
வரனுறுகரணங்கூட்டிவான்றவர்யோகினின்றார்.

(இ-ள்.) அவ்விடத்தில் நரனும் நாராயணனும் என்று சொல்லும்படி எழுந்தருளியிருக்கும் முனிவர்களைக் கைகளும் வாக்கும் பரிசுத்தமான மனமும் (மனோவாக்காயங்கள்) மாறுபடாமல் ஒருவழிப்படத் துதித்து, ஸ்திரமான (அங்குள்ள) மலையின் ஒருபக்கத்தில் விளங்கும் குகைக்குள்ளே சென்று, சிறந்த கரணங்களைக்கூட்டி, உயர்ந்த தவத்தையுடையோரான அம்மூவரும் யோகத்தில் நின்றார்கள். (எ-று.) அ

நரன், நாரணன் என்னும் இருடியர்கள் உலகத்திலுள்ளார்க்கு ஆசார்ய சிஷ்யக்கிரமத்தை வெளியிடும் பொருட்டு எம்பெருமான் கொண்ட அவதார விசேஷமானவர்கள். கரணம் என்றது மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் புறக்கரணமும், மனம் என்னும் உட்கரணமுமாம்.

* மலரவனவண்வந்துற்றுமறையவரிருவர்தம்மால்
இலரிவர்தமக்குநேர்வாரென்றறிந்ததனையோர்வான்
அலர்கதிர்விரிந்தேயோங்கியளியினமுசிப்பாடும்
மலரினின்றுலகினோடுமற்றுயிர்த்தொகையுமீன்றோன்

(இ-ள்.) அப்போது, விரிந்த பிரகாசமுடையதாய் மலர்ந்து உயர்ந்து, வண்டின் கூட்டங்கள் மொய்த்துப்பாடும் தாமரைமலரிலிருந்து உலகத்தையும் உயிர்க்கூட்டங்களையும் சிருஷ்டித்தவனான பிரமதேவன் அங்குவந்தடைந்து, வேதியர்களான நரநாராயணர்களால் இம்மூவருக்குச் சமானமானவர்கள் எங்கும் இலர் என்று அறிந்து, அதனுண்மையை யாராய்வானாயினன்.

## வேறு.

* மூவரும்யோகமேமுயலுமவ்வுழி
மேவரும்பொழில்படைத்ததனின்மென்மலர்
தூவிடுமரஞ்செடிகொடிகடுன்னவே
யெவரும்புகழ்ந்திடவியற்றினனரோ.

(இ-ள்.) ஆழ்வார்கள் மூவரும் யோகஞ்செய்யும் அவ்விடத்தில் உண்டாவதற்கரிய ஒரு சோலையையுண்டாக்கி, அதில் மிருதுவான புஷ்பங்களைச் சொரியும் மரம் செடி கொடிகளை யாவரும் புகழும் வண்ணம் நெருங்க உண்டாக்கினன். (எ-று.) ௧௦

* அன்னநந்தனவனத்தலர்ந்தபூக்களோ
மன்னியமணமதோவடிவுகொண்டதென்
றெண்ணிடவிசைக்கருமியங்களேந்தியே
மின்னெனமாதரார்மேவச்செய்தனன்.

(இ-ள்.) அப்படிப்பட்ட நந்தனவனத்தில், மலர்ந்த புஷ்பங்களோ, அவைகளிற் பொருந்திய வாசனையோ, உருவங்கொண்டதென்று எண்ணும்படி, சொல்வதற்கரிய வாத்தியங்களை யேந்திக்கொண்டு மின்னலைப் போல் பெண்கள் சென்றடையும்படி செய்தனன். (எ-று.)

பூக்களோ மணமதோ வடிவுகொண்டது என்றது, பூக்களைப்போல நிறமும் மென்மையும் வாசனையுமுடையா ரென்றபடி. ௧௧

* அக்கணத்தலர்க்கணையநங்கவேளெடுத்
துக்கிரத்தன்புகழுரைத்துச்சேனையோ
டக்கருவனத்தினூர்ந்தடைவிற்றன்றொழின்
மிக்கனவகைகளாணியற்றன்மேயினன்.

(இ-ள்.) அந்த க்ஷணத்தில் மன்மதன் புஷ்பபாணங்களை யெடுத்து, உக்கிரமான தனது கீர்த்தியைச் சொல்லிக்கொண்டு, தனது சேனை



யோடன், அந்த உயர்ந்த வனத்தினிடத்து வந்து, முறையே தனது தொழிலை மிகவும் சாமர்த்தியமானவகைகளால் செய்யத்தொடங்கினன். (எ-று.) ௧௨

* திப்பியமணமுடைத்தென்றற்காற்றுக்குஞ்
செப்பிடுமலர்க்கணைதெறிக்கும்வேளுக்கும்
மைப்படுமெழில்விழிமாதர்செய்கைக்கும்
ஒப்பறுமுனிவரர்யோகமோய்ந்திலார்.

(இ-ள்.) திவ்விய வாசனையுடைய தென்றற்காற்றுக்கும், ஐந்தாகச்சொல்லும் புஷ்பபாணங்களைவிடும் மன்மதனுக்கும், மைதீட்டிய அழகிய கண்களையுடைய பெண்கள் செய்கைகளுக்கும், ஒப்பற்ற மநநசீலர்களான ஆழ்வார்கள் யோகம் கெடாதவர்களாயினர். (எ-று.) ௧௩

* மறையவன்பின்னரும்வனத்துளூற்றிடுங்
கறையடிகொடுவரிகாளி[illegible]
டறைதருசரபமேயாதியா[illegible]
நிறைதவத்தர்நிலைநீக்கவுய்த்தனன்.

(இ-ள்.) மறுபடியும் பிரமதேவன் காட்டிலிருக்கும் யானை, புலி, சிங்கம், கரடி, சிறந்ததாகச் சொல்லப்படும் சரபம் முதலியவைகளை, நிறைந்த தவத்தையுடைய ஆழ்வார்களது யோகத்தைக் கெடுக்கச் செலுத்தினன். (எ-று.)

* விக்ககர்தம்மையவ்விலங்கின்கூட்டமே
மொய்த்துறுத்தார்த்திடமோனமெய்தியே
[illegible]
[illegible]

(இ-ள்.) ஞானிகளான ஆழ்வார்களை அந்த மிருகக்கூட்டங்கள் சூழ்ந்து பயப்படுத்தி ஆரவாரியாநிற்க, மௌனத்தை யடைந்து யோகநிலையையுற்ற ஆழ்வார்களைச் சரபங்கள் உண்டு இறந்துபோக, ஆழ்வார்கள் இவ்வுலகத்தில் இருந்ததை நன்கு அறிந்த பிறகு, (எ-று.) ௧௫

* மூவகையுலகினின்முறைதிறம்பிடத்
தேவரும்வெருவுறச்செலுவிடித்தலோ
டோவரும்பெருமழையுறுதடித்துடன்
தாவருமிறுதிநாட்டயங்குகாற்றெலாம்

* வந்தனவாமெனமருளச்செய்தலுஞ்
சிந்தனைசிறிதுமேதிறம்பலின்றியே
பந்தனையொழித்திடும்பகவர்வைகலுஞ்
சந்தமார்மலரவன்றளர்ச்சியெய்தினன்.

(இ-ள்.) மூன்றுலகங்களின் நிலை கெடும்படிக்கும் தேவர்களும் பயப்படும்படிக்கும், மேகங்களின் கர்ச்சனையுடனும் ஒழியாத பெருமழையுடனும் அதிகமின்னலுடனும் யுகாந்தகாலத்தில் தாவிவந்துதிரியும் காற்றெல்லாம் வந்தனவாமென்று சொல்லும்படிக்கு, ஆழ்வார்கள் யோகநிலை கெடும்படி செய்தானாகவும், அதனால், பந்தத்தை யொழிக்கும் மேலோரான ஆழ்வார்கள் தங்கள் யோகம் சிறிதுங்கெடாமல் இருத்தலும், அழகிய தாமரை மலரிலிருக்கும் பிரமன் தளர்ச்சியடைந்தனன். (எ-று.) ௧௬ ௧௭

* மாயவன்றன்னடிமனத்துள்வைத்திடுந்
தூயவர்புகழுறுசொல்லற்பாலதோ

(இ-ள்.) எந்தத் தேவர்களின் ஆராதனத்திலும் மிக்க ஏற்றமுடையது பகவதாராதனமாகும்; அப்பெருமானது ஆராதனத்திலும் மிகுந்த வைபவமுடையது இவ்வுலகத்தில் அவனடியார் திருவுளம்பற்றும் அழகிய ஆராதனமாகுமென்று அருளிச்செய்தனர், வைத்தையுடையரென்று உலகிலுள்ளோர் சொல்லும் ஆதியோகியர்கள். (எ-று.) உ௬

* ஆங்குமூவர்மேவுமிடத்தமரும்வாவியதுதன்னிற்
றேங்குமன்பிற்படிபவர்கடாங்கொண்டிடுபாதகமெல்லாம்
நீங்கும்வண்ணமருள்புரிந்துநெடுநாட்பின்னரவண்டீர்ந்தார்
ஓங்குமவ்வாவியுமாழ்வார்தீர்த்தமென்னவுயர்ந்துளதால்.

(இ-ள்.) அத்திருமலையில், ஆழ்வார்கள் மூவரும் எழுந்தருளியிருந்த இடத்திலிருந்த தடாகத்தில் நிறைந்த அன்புடன் நீராடுமவர்கள் கொண்டிருக்கும் பாதகங்களெல்லாம் நீங்கும்படி அருள்செய்து நெடுநாளான பிறகு அங்கு நின்றும் நீங்கினர். ஆழ்வார்கள் சம்பந்தத்தால் உயர்ந்த அந்தத் தடாகமும் ஆழ்வார் தீர்த்தமென்று யாவரும் சொல்லும்படி சிறப்புற்றிருக்கின்றது. (எ-று.) உ௭

[ஸ்ரீ அத்திகிரியில் பேரருளாளப் பெருமானைச் சேவித்து
விஷ்ணுவர்த்தனனை யாண்டருளல்.]

வேறு.

* அத்திகிரியையவரணுகிப்பேரருளாளப்பெருமானை
சித்தமுவப்பவழிபட்டிருந்திடவங்கெவர்க்குங்கந்தம்புரக்கும்
மத்தக்களிற்றுச்சரவிண்டுவர்த்தனப்பேர்மன்னவனன்றோன்
எத்திக்கினரும்புகழ்முனிவரின்னடைச்சரணவந்தெய்தினனால்.

(இ-ள்.) (அங்ஙனம் நீங்கிய) ஆழ்வார்கள் ஸ்ரீ ஹஸ்திகிரியைச் சேர்ந்து அருளாளனென்னும் பெருமானை மிகவும் வழிபட்டிருத்தலும், நெடிய கடல் புடைசூழ்ந்த உலகத்தைக் காப்பவனும் மதத்தாற் களித்த யானையையுடைய விஷ்ணுவர்த்தனனென்னும் அரசன், எத்திக்கிலுள்ளாரும் புகழும் ஆழ்வார்களுடைய தாமரைபோன்ற திருவடிகளை வந்தடைந்தனன். (எ-று.) உ௮

* அக்காலையின்மன்னவனுக்கமரரரசர்புடைசூழ்ந்து
மிக்காமாயப்போர்விளைத்துவெந்நிட்டோடச்செய்திடலும்
அக்காவலனுழ்வார்கடமையடைந்துதொழுதேத்திடவவற்குச்
செக்காராழிப்படையளித்துத்தெவ்வர்தம்மைவீட்டென்றே

(இ-ள்.) அக்காலத்தில் அந்த அரசனைச், சத்துருக்களான அரசர்கள் புடைசூழ்ந்து அதிகமான மாயயுத்தஞ்செய்து முதுகு காட்டியோடச் செய்தலும், அவ்வரசன், ஆழ்வார்களை யடைந்து வணங்கித்துதிக்க, அவனுக்கு நல்ல வலிமையுடைய சக்ராயுதத்தைக் கொடுத்து, உன்பகைவரை யழிப்பாயாக என்று (எ-று.) உ௯

* செப்பிவிடுப்பக்காவலனுஞ்சென்றாழியைவிட்டடையலரைத்
துப்பற்றிடவென்றிகழுநர்தொலையச்செய்தேமனங்களித்து
முப்பற்றொளிரம்மூவர்கடம்முளரியடியைச்சேர்ந்திறைஞ்சப்
பப்புற்றுளபாரகமெல்லாம்பண்பிற்புரக்கும்படியளித்தே

(இ-ள்.) அருளிச்செய்தனுப்ப, அரசனும் (அவ்வண்ணமே) சென்று, சக்கரப்பிரயோகஞ் செய்து சத்துருக்களை வலிமையழியும்படி வென்று, பகைத்தவர்கள் தொலையும்படி செய்து, மனங்களித்து, மூன்றுவிதக் கொள்



கையும் விளங்கும் அவ்வாழ்வார்கள் திருவடித்தாமரைகளை யடைந்து வணங்க, (அவ்வரசனுக்கு) பரவிய பூமியெல்லாம் நன்மையுடன் காக்கும்படி அருள்செய்து, (௯-று.)

மூன்றுவிதக்கொள்கை யென்றது: திருமந்திரத்திற் கூறும் ஆகாரத்திரயங்களை. அவை அநந்யார்ஹசேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோகத்வம் என்பன. ௩௦

[திருவரங்கத்தெம்மானைச் சேவித்து,
நேயங்கொண்ட மன்னனுக்கும் சோழபூபதிக்கும் அருளுதல்.]

* மேனக்கவின்புமவனடைவான்முனிவர்தாமுமரசிபுகன்
றேசுகமெய்துநோச்சிபுடையுற்றுப்பொலிகாவிரிநாப்பண்
தாமரைக்கணங்கிறைமகிழ்விற்சதுராননத்தோன்றன்னுலகும்
பூக்கொள்காக்கொளயோத்தியெனும்பொன்மாநகருந்துறந்தெய்தி

* வரியாரரவிற்றுயில்கொளுமெம்மாயோன்றன்னைமாமறைகள்
தெரியாப்புகழ்சேர்பரம்பரனைத்தேவாதிபனைச்சேவித்தே
உரியசொல்லாற்புகழ்ந்தேத்தியுள்ளக்கமலத்தவனைநிறீஇ
அரியயோகத்திருந்தவன்சீராழியுட்புக்காடினரால்.

(இ-ள்.) அவ்வரசன் மோக்ஷசுகமுமடையும்படி ஆழ்வார்கள் மூவரும் ஆசிர்வதித்து, அப்பால், உயர்வடைந்த மதில்கள் சூழ்ந்து விளங்கும் திருக்காவேரியினிடையில், பெரியபிராட்டியார் சகிதமாக, மகிழ்ச்சியுடன், பிரமதேவனது சத்தியலோகத்தையும், புஷ்பங்களைக் கொண்ட சோலைகள் சூழ்ந்த திருவயோத்தி யென்னும் பொன்மயமான பெருமை பொருந்திய நகரத்தையும் விட்டுவந்து, அரிகளையுடைய சேஷசயநத்தில் அறிதுயிலமரும் எமது மாயப்பிரானை, உயர்ந்த வேதங்களும் தெரிந்துகொள்ளாத வைபவத்தையுடைய பரம்பரனை, தேவாதிபனைச் சேவைசெய்து, உரிய சொற்களாலே புகழ்ந்து துதித்து, தங்கள் இருதயகமலத்தில் அப்பெருமானை நிலைக்கச்செய்து, அருமையான யோகத்திலிருந்து அவனது கலியாண குணங்களான சமுத்திரத்திற் படிந்து ஆடினார்கள். (எ-று.) ௩௧ ௩௨

ஸ்ரீரங்கநாதன், பிரமதேவன் செய்த தவத்துக் கிரங்கி, பிரமலோகத்தில் ஆவிர்ப்பவித்து, அங்கு நெடுங்காலம் பிரமனால் ஆராதநங்கொண்டிருந்து, பிறகு இக்ஷ்வாகுமஹாராஜன் தவஞ்செய்து பிரார்த்தித்தபடியே திருவயோத்திக் கெழுந்தருளி, அங்கு சூரியவமிசத்தரசர்களால் ஆராதிக்கப்பட்டிருந்து, சக்ரவர்த்தித் திருமகனால் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குக் கொடுக்கப்பெற்று, அவர் இலங்கைக்குக் கொண்டுபோகும் போது, தர்மவர்மா என்னும் சோழராஜன் முதலானோர் மநோரதித்து எதிர்நோக்கியிருந்து வேண்டினபடியே திருக்காவேரியினிடையில் திருவரங்கத்தில் எழுந்தருளி யிருந்து சேவை சாதித்தலால், சதுராননத் தோனுலகும் அயோத்திநகரும் துறந்து காவிரிநாப்பண் எய்தி என்றார்.

வேறு.

* தீவினைத்தொடர்பினு(ம்)நசியொடுகிலைசீர்வார்ந்து
மேவியகுட்டநோயாலவேண்டிடாமுலைமாற்றந்தான்
றுவியேவீசுமெய்யன்றராபதியொருவனுங்குத்
தேவியன்மூவர்தம்மைச்சேர்ந்தடைந்திட்டான்மாதோ,

(இ-ள்.) முன்செய்த பாவத்தின் சம்பந்தத்தினாலே சீயும் சிலைநீரு மொழுகி, பொருந்திய குஷ்டரோகினால் (ஒருவரும்) விரும்பாத துர்க்கந்தமான தாவி வீசும் சரீரத்தையுடையவனான அரசனொருவன் அவ்விடத்தில் தெய்வத்தன்மையுள்ள ஆழ்வார்கள் மூவரையுமடைந்து சரணாகதி செய்தனன். (எ-று.) ௬௩

* அன்னவனாழ்வார்மூவரடிப்பொடிதன்னைப்பூசித்
தன்னுடைக்குற்றமெல்லாந்தணந்துடல்விளக்கமெய்தி
வன்னமாமலரம்புள்ளான்வடிவமும்வாடும்வண்ணம்
பன்னரும்வனப்பின்யோகிதாசப்பேர்படைத்தான்மன்னோ.

(இ-ள்.) அவ்வரசன், ஆழ்வார்கள் மூவரது திருவடிப் பொடியைப் பூசிக்கொண்டு, தனது தோஷமெல்லாம் நீங்கி, உடம்பு பிரகாசமடைந்து, நிறமும் பெருமையுமுடைய புஷ்பபாணங்களைக் கொண்ட மன்மதனது உருவமும் வாட்டமடையும்படி சொல்வதற்கரிய அழகுடன் யோகிதாசனென்னும் பெயர் பெற்றனன். (எ-று.) ௬௪

* வேந்தனுமவனையாண்டுமேவியாங்கிருக்குங்காலைப்
பூந்துறைக்காவிரிப்பேர்ப்பொன்னிநாடாளுமன்னன்
காந்தையோடன்றநூறுகன்னியர்தங்களோடும்
போந்தவரடியாங்கஞ்சம்போற்றினன்வணங்கினானால்.

(இ-ள்.) அரசனானவனை அடிமை கொண்டு, பொருந்தி அவ்விடத்திலிருக்கும்போது, அழகிய துறைகளையுடைய காவிரியென்னும் பெயர்பெற்ற பொன்னிநதியையுடைய சோழநாட்டையாளும் அரசன், தன் மனைவியுடனும் தான்பெற்ற நூறு கன்னிகைகளுடனும் வந்து, ஆழ்வார்களது திருவடித்தாமரைகளைத் துதித்து வணங்கினன். (எ-று.) ௬௫

* வாருசன்றன்னையாண்டுவளந்திணிநியாசவித்தை
யோகியரளிப்பவன்றானுடலமும்பொருளும்வாழ்வும்
போகுவவெனத்துணிந்துபொய்ம்மயக்ககந்துநின்றான்
யோகிதாசப்பேர்மன்னற்குளமயல்கொண்டாராகி

(இ-ள்.) ஆதியோகியர் அவ்வரசனை அடிமை கொண்டு வளப்பமுடைய சரணாகதி வித்தையையுபதேசிக்க, (அவ்வளவில்) அவ்வரசன், பொய்யான மயக்கத்தை விட்டுச், சரீரமும் பொருளும் வாழ்வும் நிலையில்லாதனவே எனத் துணிந்து நின்றான். (அப்போது முன்சொன்ன) யோகிதாசனென்னும் பெயரையுடைய அரசனிடத்து மனத்தாசை கொண்டவர்களாய், (எ-று.) ௬௬

* நூறுகன்னியரும்வேட்டார்நோன்புகழ்வளவன்றானுந்
தேறியாங்கவற்கன்னோரைத்திருமணஞ்செய்வித்தான்று
தாறுகடோறும்வீழுஞ்சால்புடைத்தீந்தேன்பாய்ந்து
சேறுசெய்பழனமேவுந்திகழ்புகழ்ச்சோழநாடும்

(இ-ள்.) அந்த நூறுகன்னியரும் அவனை விரும்பினார்கள். (அதனை) உயர்ந்த புகழையுடைய (அந்தச்) சோழபூபதியறிந்து, அந்தயோகிதாசனுக்கு அவர்களைத் திருமணஞ்செய்வித்து, நிறைந்த பழக்குலைகள் தோறும் நின்று வீழும் சிறப்புடைய இனிய தேன் பாய்ந்து சேறு செய்யும் கழனிகள் பொருந்திய விளங்கும் புகழையுடைய சோழநாட்டையும், (எ-று.) ௬௭



* மற்றுள்சிறப்பிற்றுயவளனெலாம்வரனுமந்தக்
கொற்றவன்றனக்குநல்கிக்கோதறுமுனிவோர்தங்கள்
பொற்பமையருள்வந்தெய்தப்பொன்றுதலில்லாச்சீர்த்திப்
பெற்றிவைகுந்தமென்னும்பெருநகரடைந்திட்டானால்.

(இ-ள்.) மற்றுமுள்ள சிறப்பையுடைய வளங்களெல்லாவற்றையும், மணவாளனாகிய அந்த அரசனுக்குக் கொடுத்துவிட்டு, குற்றமற்ற ஆதியோகியர்களது பொலிவுடைய திருவருள் வந்துகூடவே, என்று மழியாத சிறப்புத்தன்மையுடைய ஸ்ரீவைகுண்டமென்னும் பெரியநகரத்தையடைந்தனன். (எ-று.) ௬௮

* சீர்த்திசால்யோகிதாசச்செம்மலுமூவர்தம்மை
யார்த்தியிற்பணிந்துபோற்றியளவிலாளவனியாண்டு
பூர்த்தியாவின்புதுய்த்தந்தம்பொருளுணர்வெய்தியேந்துங்
கூர்த்தசீராழிமாயன்குரைகழலடைந்திட்டானால்.

(இ-ள்.) மிக்கசிறப்புடைய யோகிதாசனென்னும் அரசனும் ஆழ்வார்கள் மூவரையும் உருக்கத்தோடு பணிந்து துதித்து அளவற்றகாலம் பூமியையாண்டு, பூர்ணமாக இன்பங்களையனுபவித்து, அர்த்தபஞ்சகஞானமடைந்து, கூர்மையான சிறப்புடைய திருவாழியேந்தும் எம்பெருமானது ஒலிக்கும் வீரக்கழலையணிந்த திருவடியை யடைந்தனன். (எ-று.)

அர்த்தபஞ்சகஞானம் என்பது ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம் என்னும் ஐம்பொருளின் தன்மைகளை உள்ளபடி யறிதலாம். ௬௯

[சுவேதத்வீபத்தில் எம்பெருமானைச் சேவித்தல்.]

* அத்தலமிகந்தபின்னரறிவராமூவர்தாமும்
முத்தர்போன்றொளிர்வார்வாழ்மொழிபுகழ்ச்சுவேதமென்னும்
வித்தகத்தீவைமேவியன்னவர்விழைந்துபோற்றும்
அத்தனைப்பணிந்துபோற்றியாங்குநின்றன்பினெய்தா

(இ-ள்.) அந்தத் திருவரங்கத்தை விட்டு நீங்கின பிறகு, ஞானிகளான ஆழ்வார்கள் மூவரும், முக்தபுருஷர்களைப் போல விளங்குவோர் வாழுமதாய் யாவருஞ் சொல்லும் புகழையுடைய ஞானமயமான சுவேத த்வீபத்தையடைந்து, அவர்கள் விரும்பிப்போற்றும் எம்பெருமானை வணங்கித்துதித்து, அவ்விடத்தினின்று அன்போடுவந்து, (எ-று.) ௭௦

[திருப்பாற்கடல் நாதனைச் சேவித்தல்.]

* பாற்கடறன்னின்மின்னும்பணுடவிச்சேடன்மீது
நூற்கடலுணர்ந்தோராயநோன்மையரமரர்போற்ற
வேற்கண்மாமடந்தையோடுமேவுமெம்பெருமான்றன்னை
மாற்கனாயிலதாயேத்திவணங்கியேமீண்டபின்னர்

(இ-ள்.) திருப்பாற்கடலில், பிரகாசிக்கும் பலபடங்களையுடைய திருவநந்தாழ்வான்மீது, சாஸ்திரமாகிய கடலையறிந்தவர்களான பெருந்தகைமையுடையாரும் தேவர்களும் துதிக்கும்படி, வேல்போலுந் திருக்கண்களையுடைய பெரியபிராட்டியாரோடு எழுந்தருளியிருக்கும் க்ஷீராப்திநாதனைத் தங்கள் அன்புக்கு முடிவில்லையென்னும்படி துதித்து வணங்கி மீண்டபின் (எ-று.) ௭௧

[சூரியமண்டலத்தில் இறைவனைச் சேவித்தல்.]

* சுடர்விடுமணிகள்பூண்டசோதியைத்தோளுன்காலை
அடல்பெறுமாழிசங்கமணிந்திநிறத்திஞனை
உடலிணையின்றன்னையொப்பிலாப்புருடன்றன்னை
மடலவிழ்பதுமம்போலவயங்குசெங்கண்ணிஞனை

(இ-ள்.) பிரகாசிக்கும் திருவாபரணங்கள் பூண்ட சோதிச்சொரூபனானவனை, நான்கு திருத்தோள்களுடையவனை, வலிமைபெற்ற திருவாழி திருச்சங்குகளையணிந்தவனைப் பொன்னிறத்தையுடையவனை, ஒப்பில்லாத புருஷோத்தமனை, இதழ்கள் விரிந்த செந்தாமரையைப்போல் விளங்கும் சிவந்த திருக்கண்களுடையவனை, (எ-று.) ௪௨

* சூரியனுப்பண்மன்னித்தொன்மறையவர்கள்வாழ்த்துக்
கோரிறையாயதேவையுற்றுவாழ்த்தெடுத்துப்போற்றிச்
சீரியவெம்மானுந்திச்செழுமலருதித்தசெம்மல்
ஏரியனாட்டையெய்தியினிதிருக்குறைந்தெஞ்ஞான்றும்

(இ-ள்.) சூரிய மண்டலத்தினிடையில் எழுந்தருளியிருந்த பழமையான வேதத்துக்குரிய அந்தணர்களது வாழ்த்துதலுக்கு ஒப்பற்ற தலைவனான தேவனை யடைந்து, மங்கலாசாசனஞ் செய்து துதித்து, பரனான எம்பெருமானது திருவுந்தியிற்பூத்த செழுமையான தாமரைமலரிற் பிறந்த பிரமதேவனது அழகிய சத்தியலோகத்தையடைந்து, நன்றாய் அந்தலோகத்தில் எந்நாளும் எழுந்தருளியிருந்து (எ-று.) ௪௩

[பிரமலோகத்தில் பெருமானைச் சேவித்தல்.]

* மலரவன்பணிந்துபோற்றுமாயனைத்தெரிசித்தேத்தி
அலர்பொருவவன்றாட்போதையன்பினின்முடிமேல்வைத்துப்
பலர்புகழருஞ்சீர்மேயபகவராயழிவில்யோகத்
தலர்மனத்தரியைக்கொள்வாரயன்பதியொருவினூரால்.

(இ-ள்.) பிரமதேவன் வணங்கித்துதிக்கும் மாயப்பிரானைத் தரிசித்துத் துதித்து, மலரையொத்த அவன் திருவடிகளை அன்போடு தங்கள் முடியிலணிந்துகொண்டு, பலரும்புகழும் அரியசிறப்புடைய ஞானவான்களாய், அழிவில்லாத யோகத்தில் மலரும் தங்கள் திருவுளத்தே எம்பெருமானையெழுந்தருளப்பண்ணும் ஆழ்வார்கள் மூவரும், பிரமனது சத்தியலோகத்தைவிட்டு நீங்கினார்கள். (எ-று.) ௪௪

[வியூக மூர்த்திகளைச் சேவித்தல்.]

* ஆமோதவுலகின்மன்னுமழிவில்சங்கருடணப்பேர்ந்
தாமோதரன்பொற்பாதந்தகவுடன்பணிந்துமேலோர்
தாமோதுசம்மோதப்பேர்த்தகையுலகெய்தியாங்குத்
தோமேதுமிலாதுதோன்றுமனிருத்தற்றொழுதுவாழ்த்தி

(இ-ள்.) (அதன்பின்னர்) ஆமோத லோகத்தில் எழுந்தருளியிருக்கும் அழிவில்லாத சங்கர்ஷணனென்னுந் திருநாமத்தையுடைய எம்பெருமானது அழகிய திருவடிகளை உரிமையாகப்பணிந்து, உயர்ந்தோர் சொல்லும் சம்மோதமென்னும் பெருமைவாய்ந்த லோகத்தையடைந்து, அங்கு ஒரு குற்றமுமில்லாது விளங்கும் அநிருத்த மூர்த்தியை வணங்கித்துதித்து (எ-று.) ௪௫



* பிரமோதவுலகின்மேயபிரத்தியுன்னன்றன்னற்றாள்
திரமாகப்பணிந்துநீங்கிச்செகதலந்தன்னினெய்தி
வரமேயிலீந்துநம்மில்வந்தவர்தமைப்புரந்து
பரமானந்தத்தியோகம்பயின்றுபல்லாண்டிருந்தே

(இ-ள்.) பிரமோத லோகத்தில் எழுந்தருளியிருக்கும் பிரத்தியும்நமூர்த்தியின் நல்லதிருவடிகளை ஸ்திரமாகப்பணிந்து, (அங்குநின்றும்) நீங்கி பூலோகத்துக்கு வந்து, தங்களைவந்தடைந்தவர்களுக்கு ஒழியாத வரங்களைக் கொடுத்து ரக்ஷித்து, பரமானந்தமயமான யோகாப்பியாசத்துடன் பல வருஷங்களிருந்து, (எ-று.) ௪௬

[திருநாட்டுக் கெழுந்தருளல்.]

* சுழிமுனைநாடியாறுய்த்தலங்குறுபிரமரந்திர
வழியதுபேதித்தேகிவயங்கர்ச்சிராதிநண்ணி
மொழிதருதினமும்வெண்மைப்பக்கமும்வருடமுங்கொள்
பழியறுமபிமாநத்தர்பரவவேபண்பினேகி

(இ-ள்.) சுழிமுனை நாடியின் வழியாக, பிரகாசமுடைய பிரமரந்திர வழியைப்பேதித்துக்கொண்டு புறப்பட்டு, விளங்கும் அர்ச்சிராதி மார்க்கத்தையடைந்து, சொல்லப்படுவதான தினமும், சுக்லபக்ஷமும், வருஷமும் கொண்ட பழிப்பற்ற அபிமானிகளான (அஹராபிமாநி, சுக்லபக்ஷாபிமாநி, வருஷாபிமாநி) தேவதைகள் வணங்கும்படி பண்போடு சென்று, (எ-று.)

அஹராபிமானி முதலாகச் சொல்லப்படும் தேவதைகள், மோக்ஷமடையும் முக்தபுருஷர்கள் செல்லும் அர்ச்சிராதிமார்க்கத்தில் முறையே இருப்பவர்களாம். மண்டலம் லோகம் எனப் பெயரிய இவர்கள் இடங்களின் வழியே ஆதிவாஹிகர் வழிகாட்ட முக்தபுருஷர்கள் ப்ராஹ்மாநுமூர்ந்து செல்லும்போது இத்தேவதைகள் அவர்களை வந்தனை வழிபாடுகள் செய்து ஸத்கரிப்ப ரென்பது சாஸ்திரங்களின் துணிபு. ௪௭

* பவனன்வெங்கதிர்கண்மேயபகலவன்மண்டிலத்தைத்
துவங்கிலையுடையாரண்மிச்சோமனுருலகுநீங்கித்
தவலறுவருணன்பாகசாதனனமரராயோர்
இவர்புகழ்ந்தேத்தவன்னுருலகமுமிகந்தபின்னர்

(இ-ள்.) வாயு மண்டலத்தையும், வெம்மையான கிரணங்களையுடைய ஆதியோகியர் சூரிய மண்டலத்தையும் ஸ்திரமான நிலைமையையுடைய சேர்ந்து, சந்திரமண்டலத்தையுங்கடந்து, கெடுதலில்லாத வருணன் இந்திரன் தேவர்கள் ஆகிய இவர்கள் புகழ்ந்து துதிக்க அவர்கள் உலகங்களையுங் கடந்த பின்னர், (எ-று.) ௪௮

* பனிமதிச்சடிலன்செய்யபங்கயனுவந்துபோற்ற
அனையவருலகந்தீர்ந்தேழரணமும்பாழுநீங்கித்
துனியறுவிரசைமூழ்கித்துயவாமுடலந்தாங்கிக்
கனியிதழ்பரவும்வேற்கட்காரிகையர்தம்மோடு

(இ-ள்.) குளிர்ந்த சந்திரனைச் சடையிற்றரித்த சிவபிரானும், சிவந்த தாமரையாசனத்தையுடைய பிரமதேவனும் சந்தோஷித்துத்துதிக்க அவர்கள் உலகங்களையுங்கடந்து, ஏழாவரணங்களையும் பெரும்பாழான மூலப்பிரகிருதியையுங் கடந்து, சூக்ஷ்மசரீரமும் வாஸநாரேணுக்களும் நீங்கும் விர

ஞானதியில் சேராடி, (அமானவர் [illegible] அப்பிராக்ரு[illegible] சுத்த சரீரத்தைக்கொண்டு, கொவ்வைக்கனிபோன்ற அ[illegible] வேலைப்போலுங் கண்களையுமுடைய அப்சரசுக்களோடு (எ-று.)

ஏழாவரணங்கள் : ஜலாவரணம், அக்கினியாவரணம், வாயுவாவரணம், ஆகாசாவரணம், அஹங்காராவரணம், மஹதாவரணம், அவ்யக்தாவரணம் என்பன. இவை ஒவ்வொன்றும் பதிற்றுமடங்கு கனைத்து, அண்டத்தைச் சூழ்ந்திருக்கும் அண்டபித்திகைச் சூழ்ந்திருப்பனவாம். ௨௯

* வானாட்டவர்களெய்திவழிபட்டுக்கொடுபோய்மிக்க
வானசம்பிரமத்தோடுமலங்கரித்துடனேயெய்த
வானவர்முனிவர்க்கெட்டாமாமணிமண்டபத்திற்
றேனமர்துளவமாயோன்சேவடியதனையண்மி

(இ-ள்.) நித்திய சூரிகள் எதிர்கொண்டுவந்து வழிபட்டு அழைத்துக் கொண்டுபோய் (உபசரித்து) அதிகமான சம்பிரமங்களுடன் ப்ரஹ்மாலங்காரஞ் செய்வித்துக் கூடவேவர, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் எட்டாத திருமாமணிமண்டபத்தில், தேன் பொருந்திய திருத்துழாய் மாலையணிந்த எம்பெருமானது சிவந்த திருவடிகளைச்சேர்ந்து, (எ-று.) ௩௦

* மோனாரமூவர்தாமுமுளரியாள்முன்னாராக
மானனியுவப்பிற்செந்தாமரைமுகமலரவன்பர்
ஆனநித்தர்களைன்முத்தராவர்களுட்கூடிநன்மோக்ஷத்
தானமாமெழில்வைகுந்தத்தனில்வாழ்ந்திட்டார்மாதோ.

(இ-ள்.) மௌன நிலையையுடையரான ஆழ்வார்கள் மூவரும், தாமரையில் வீற்றிருக்கும் பெரியபிராட்டியார் புருஷகாரஞ்செய்யவும், எம்பெருமான் மிகச்சந்தோஷத்துடன் செந்தாமரைபோன்ற திருமுகமண்டலம் மலரவும், சேஷபூதர்களான நித்தியர்களுடனும் நல்ல முக்தர்களுடனும் கூடி, நல்ல மோக்ஷ ஸ்தானமாகிய அழகிய ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ந்திருந்தார்கள். (எ-று.) ௩௧

---

[இம்முதலாழ்வார்கள் மூவர் திருவவதாரமும், ஐப்பசியில் முறையே திருவோணம், அவிட்டம், சதயம் என்னும் மூன்று தினங்களென்று முன்னே சொல்லப்பட்டது. இவற்றைத் துவாபரயுகம் எட்டிலக்ஷத்து அறுபத்தீராயிரத்துத் தொள்ளாயிரத்தோராவது வருஷமான சித்தார்த்தி வருஷம், ஐப்பசிமாதம், சுக்லபக்ஷம், அஷ்டமி, மங்களவாரங்கூடின திருவோண நக்ஷத்திரதினமும் தொடர்ந்த இரண்டு தினங்களுமெனக் கொள்க. இவ்வாழ்வார்கள் எழுந்தருளியிருந்து திருநாட்டுக் கெழுந்தருளின இடம் தெரியவில்லை. இவர்கள் விபவமாக எழுந்தருளியிருந்த காலம் மூவாயிரத்து முந்நூற்றிருபத்தைந்து வருஷமென்பர்.]

௨-வது ஆதியோகிச்சருக்கம் முற்றிற்று.

---

முதலாழ்வார்கள் திருவடிகளே சரணம்.